விலை ரூபா: 5.00 பக்கங்கள் பத்து *Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி
# VALAMPURI


றெனி மூக்குக் கண்ணாடி அகம்
"RENNY"

கண் பரிசோதித்து கண்ணாடி வழங்குபவர்கள்
540, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 தை 22 திங்கட்கிழமை (04.02.2002) தொலைபேசி 3378 ஒலி 47


## பலம் இழந்த நிலையில் பேசுவதற்கு விடுதலைப்புலிகள் தயார் இல்லை

### செய்தியாளர் மாநாட்டில் கரிகாலன் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் கட்டாய ஆட்சேர்ப்பு நடவடிக்கை எதிலும் ஈடுபடவில்லையென்று மட்டு அம்பாறை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் எஸ். கரிகாலன் தெரிவித்துள்ளார்.

இராணுவக் கட்டுப்பாடற்ற மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையில் நேற்று ஊடகவியலாளர்கள் சந்திப்பொன்று இடம் பெற்றுள்ளது.

இச் சந்திப்பின் போதே கரிகாலன் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் கட்டாய ஆட்சேர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுவருவதாக சில ஊடகங்களில் வெளியான செய்திகளை முற்றாக நிராகரித்த அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் :-

எமக்கு எதிரான சக்திகள் நாம் கட்டாய ஆட்சேர்ப்பில் ஈடுபடுவதாகத் தவறான பிரச்சாரங்களை மேற்கொள்கின்றன.

எம்மைப் பொறுத்தவரை யுத்தம் இன்றி ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வை அரசு முன்


(2ம் பக்கம் பார்க்க)


## இன்றும் மறியற் போராட்டம்

யாழ் குடாநாட்டு மீனவர்கள் மேற்கொண்டுவரும் மறியற் போராட்டம், இன்று ஐந்தாவது நாளும் திட்டமிட்டபடி நடைபெறுமென்று, வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அறிவித்துள்ளது. யாழ் அரச செயலகம் முன்பாக இடம்பெறும் இம் மறியற் போராட்டத்தினால் செயலகத்தின் வழமையான பணிகள் பாதிக்கப்படுவதுடன் இன்று இன்றைய சுதந்திரதின நிகழ்வுகளும் பாதிக்கப்படலாமென்று எதிர் பார்க்கப்படுகிறது. (இ)

### ........... பருத்தித்துறை தும்பளையில் வீட்டில் ...........

# தனிமையில் இருந்த இரு பெண்கள்

# எரிந்த நிலையில் சடலமாக மீட்பு

## வடமராட்சியில் பரபரப்பு

(வடமராட்சி நிருபர்கள்)

**பருத்தித்துறை தும்பளைப் பகுதியில் உள்ள வீடொன்றில் திருமணமாகாத இரு பெண்கள் எரியுண்ட நிலையில் பருத்தித்துறை பொலிஸாரினால் சடலமாக மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.**

**பருத்தித்துறை பழைய நகரசபைக் கட்டிடத்திற்கு அருகாமையில் உள்ள வீடொன்றில் இருந்து மர்மமான முறையில் எரியுண்ட நிலையில் இச் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளது. இக் கொடூரச் சம்பவம் பருத்தித்துறை பகுதியில் பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.**

பருத்தித்துறை தும்பளை பிரதான வீதியில் பருத்தித்துறை பழைய நகரசபைக்கட்டிடத்திற்கு அருகே உள்ள வீடொன்றில் தனிமையாக வசித்து வந்த திருமணமாகாத இரு பெண்களே

டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது ;

மேற்படி வீட்டில் இருந்த இரு பெண்களையும் வெளியில் காணாத அயலவர்கள் இவர்க

பார்த்த போதே அவ் வீட்டில் இருந்து துர்நாற்றத்துடன் கூடிய புகை வெளியேறுவதை அவதானித்ததுடன் அது குறித்து பருத்தித்துறை பொலிஸிலும் முறைப்பாடு செய்தனர். இம் முறைப்

## இத்தாலிக்கு களவாகப் புறப்பட்ட

## படகு பாறையில் மோதியது

### 50 பேர் பலி. 9 பேர் உயிருடன் மீட்பு

(கொழும்பு)

இலங்கையில் இருந்து சட்ட விரோதமாக இத்தாலியில் குடியேறுவதற்காக பயணிகளை ஏற்றிச் சென்ற படகு விபத்துக் குள்ளானதில் 50 பேர் பலியானார்கள்.

நீர்கொழும்பு கடற்பரப்பில் இருந்து நேற்று முன்தினம், புறப்பட்டுச் சென்ற இப் படகு மாத்தறை தெவிநுகரப் பகுதியிலேயே இந்த அனர்த்தத்திற்குள்ளானது.

சம்பவத்தை அடுத்து காலி கடற்படை முகாமைச் சேர்ந்த சுழியோடிகள் மேற்கொண்ட தேடு

பேர் உயிருடன் மீட்க்கப்பட்டனர் நால்வர் சடலமாக மீட்கப்பட்டனர்.

பாறை ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளான இந்தப் படகில் சுமார் 80க்கும் மேற்பட்டோர் பிரயாணம் செய்ததாக தெரியவந்துள்ளது.

உயிருடன் மீட்கப்பட்ட 9 பேரில் இருவர் மாத்தறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காணாமல் போனவர்களைத் தேடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளதுடன் விபத்துக்குள்ளான படகை சுழியோடிகள்

பருத்தித்துறை தும்பளை பிரதான வீதியில் பருத்தித்துறை பழைய நகரசபைக்கட்டிடத்திற்கு அருகே உள்ள வீடொன்றில் தனிமையாக வசித்து வந்த திருமணமாகாத இரு பெண்களே எரியூட்டி கொலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது ;

மேற்படி வீட்டில் இருந்த இரு பெண்களையும் வெளியில் காணாத அயலவர்கள் இவர்களது வீட்டுப்பக்கம் சென்று பார்த்த போதே அவ் வீட்டில் இருந்து துர்நாற்றத்துடன் கூடிய புகை வெளியேறுவதை அவதானித்ததுடன் அது குறித்து பருத்தித்துறை பொலிஸிலும் முறைப்பாடு செய்தனர். இம் முறைப்

(10ம் பக்கம் பார்க்க)

மாதத்தறை தெவிநுகரப் பகுதியிலேயே இந்த அனர்த்தத்திற்குள்ளானது.

சம்பவத்தை அடுத்து காலி கடற்படை முகாமைச் சேர்ந்த சுழியோடிகள் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது 9 ... தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காணாமல் போனவர்களைத் தேடும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளதுடன் விபத்துக்குள்ளான படகை சுழியோடிகள்

(10ம் பக்கம் பார்க்க)

### அரசு-விடுதலைப்புலிகள்

# நிரந்தர யுத்த நிறுத்தம் இம் மாதம் 19ல் கைச்சாத்து

### நோர்வே வட்டாரங்கள் தகவல்

(ஒஸ்லோ)

புதிய ஐக்கிய தேசிய முன்னணி அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான நிரந்தர யுத்த நிறுத்த ஒப்பந்தம் இம் மாதம் 19ந் திகதி கைச்சாத்தி டப்படலாமென நோர்வேத் தூதரக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில்;

இரு தரப்பு யுத்த நிறுத்தத்தை முன்னெடுக்கும் வகையில் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சு நடத்தும் முகமாக நோர்வே அரசாங்கத்தின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஜவர் ஹெல்கீசன் தலைமை யிலான தூதுக்குழு ஒன்று இவ் வாரம் இலங்கை வரவுள்ளது.

இதே வேளையில் விடுதலைப் புலிகள் மற்றும் இலங்கை அரசுத் தரப்பில் கடைப்பிடிக்கப்படும் யுத்த நிறுத்தம் மற்றும் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் இம் மாதம் 24ந் திகதியுடன் காலாவதியாவதற்கு முன்னதாக நிரந்தர யுத்த நிறுத்தம் கடைப்

(10ம் பக்கம் பார்க்க)

# வடமராட்சி– தென்மராட்சி நோக்கி இராணுவத் தளபாடங்கள் நகர்வு

### மக்கள் மத்தியில் மீண்டும் அச்சம்

வடமராட்சி கிழக்கு மற்றும் தென்மராட்சி பகுதிகளில் உள்ள படைத்தளங்களுக்கு இராணுவத் தளபாடங்கள், கவசவாகனங்கள், செயின்புளொக்குகள் என்பன கடந்த இரண்டு தினங்களாக நகர்த்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அப்பகுதி மக்களிடையே அச்சம் நிலவுவதுடன் நோர்வே அரசின் அனுசரணையுடன் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான முயற்சிகள் நடைபெற்றுவருகின்ற இந்த நேரத்தில் இராணுவ முகாம்களின் முன்னணி காவலரண் பகுதிகளுக்கு இராணுவத் தளபாடங்கள் நகர்த்தப்படுவது மக்கள் மத்தியில் மீண்டுமொரு யுத்தம் வெடிக்குமோ என்ற அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது(இ-23)

# சமாதானத்தை வலியுறுத்தி மட்டு– அம்பாறை மாவட்டங்களில் மாபெரும் எழுச்சிப் பேரணி

### 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் சமாதானத்தை வலியுறுத்தும் வகையில் மட்டு அம்பாறை மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று மாபெரும் சமாதான எழுச்சிப் பேரணிகள் நடைபெற்றுள்ளது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் தலைமையில் நடைபெற்ற இப் பேரணியில்,

* தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண் டும்
* பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட்டு சகல தமிழ் அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும்.
* தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமை பெற்று சுதந்திரமாக வாழ வேண்டும்.
* இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண இந்தியா தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் ஆரம்பமான சமாதானப் பேரணிக்கு பாராளுமன்ற உறுப்பினர்களான ரி. தங்கவேல், ஜோசப் பரராஜசிங்கம், ஞா. கிருஷ்ணபிள்ளை, சந்திரநேரு அரியநாயகம்

(10ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### வகுப்புக்கள்

ஆண்டு 6 இல் இருந்து 11 வரையான முக்கிய பாடங்களும் அத்துடன் ஆங்கிலத்தில் கதைப்பதற்கும் பயிற்சி. அனுமதிக்கு ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302) காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் நாகலிக்க சுவாமிகள் வீதி, சங்கானை. (4439)


## சுன்னாகம் அரசினர் வைத்தியசாலைக்கு புதிய பொறுப்பதிகாரி

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மத்திய மருந்தகப் பொறுப்பதிகாரியாக டாக்டர் ஆ. திருநாவுக்கரசு கடந்தவாரம் பதவியேற்றுள்ளார். அங்கு கடமையாற்றிய டாக்டர் ம. சந்திரசேகரம் தெல்லிப்பழை மாவட்டவைத்தியசாலைக்கு மாற்றமாகிச் சென்றுள்ளார். (ந)

# எதிர்க்கட்சித் தலைவரை தெரிய பொ.ஐ.முன்னணி இன்று கூடுகிறது!

## மகிந்த; அனுரா; றிச்சாட் போட்டியிடலாம்

(கொழும்பு)

புதிய எதிர்க்கட்சித் தலைவரை தெரிவு செய்வதற்காக பொதுஜன ஐக்கியமுன்னணியின் பாராளுமன்றக் குழுக்கூட்டம் இன்று ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் கூடுகின்றது.

இன்று கூடவுள்ள பாராளுமன்றக் குழுக்கூட்டத்தில் மகிந்தராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவு செய்யப்படலாம் என்று தெரிவிக்கப்பட்ட போதும், வேறும் சிலரும் இப்பதவிக்கு போட்டியிடுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை புதிய எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு ஜனாதிபதி சந்திரிகாவின் சகோதரர் அனுரா பண்டாரநாயக்கா அல்லது றிச்சாட்பத்திரனா போட்டியிடலாம் எனவும் பிந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறு இருக்க எதிர்க்கட்சித் தலைவராக மகிந்தராஜபக்ஷவை நியமிப்பது தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா அவருடன் உரையாடியிருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி தனக்கு அளிக்கப்பட்டால் அதனை மகிழ்ச்சியுடன் ஏற்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ந)

## படையினருக்கான பயிற்சி தொடர்ந்தும் வழங்கப்படும்

### பாதுகாப்புஅமைச்சர் தகவல்

நோர்வே அரசின் அனுசரணையுடன் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதானமுயற்சிகள்வெற்றியடையும்அதற்கான அனைத்து முயற்சிகளையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எடுத்துவருகின்றார். இவ்வாறு பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன தெரிவித்துள்ளார்.

அரசிற்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் இடம்பெற்று வரும் சமாதான முயற்சிகள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது. அரசாங்கம்இராணுவத்தினருக்கு வழமையாகக் கொடுக்கப்படும் பயிற்சியினை மேற்கொண்டு வருகிறது இது தவிர்க்கமுடியாத தொன்று ஆனால் வேறு வகைகளில் இராணுவத்தை வளப்படுத்தும் நோக்கம் அரசுக்கு இல்லையென்றும் தெரிவித்த பாதுகாப்பமைச்சர் விடுதலைப்புலிகளும் தம்மைப் பலப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவில்லை என்றும் கூறினார். (வ)

### கலந்துரையாடல்

வடமராட்சிதெற்கு,மேற்கு பிரதேசசபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள சனசமூகநிலையங்களின் தலைவர் செயலாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை மறுதினம் புதன்கிழமை காலை 10மணிக்கு பிரதேசசபைக் கட்டிடத்தில் நடைபெறவுள்ளது.

அக்கூட்டத்தில் அனைத்து சனசமூக நிலையங்களினதும் தலைவர் மற்றும் செயலாளர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேசசபை தலைவர் த. ஜெயராசாகேட்டுள்ளார் (ந-5)

பலம்

வைத்தால் அனதைநாம் ஏற்கத்தயார்.

ஆனால் அதற்காக போராட்ட சக்தியைவிட்டுக் கொடுக்கவோ அல்லது பலமிழந்த நிலையில் பேசுவதற்கோ நாம் தயார் இல்லை.

ஏனெனில் விடுதலைப் புலிகளின் போராட்ட பலத்தினால் தான் அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு முன்வந்தது.

எம்மைப் பொறுத்தவரை எமது படைப்பலத்தைப் பெருக்க யாரையும் நாம் கட்டாயப்படுத்திச் சேர்க்கவில்லை. பதிலாக எமது அமைப்புடன் விரும்பிஇணைந்து கொள்பவர்களையும், பெற்றோர்களால் ஒப்படைக்கப்படுபவர்களையுமே சேர்த்துக் கொள்கிறோம். என்று கூறிய கரிகாலன் அரச தரப்பு தற்பொழுது படைப்பல அதிகரிப்பில் ஆர்வம் காட்டி வருவதாகக் கூறினார்.

இதேவேளை அரசின் தற்போதைய நல்லெண்ண நடவடிக்கைகள் தொடர்பாக ஊடகவியலாளர்கள் கரிகாலனிடம் வினா எழுப்பி அவரது கருத்தைக் கூறுமாறு கேட்டடனர் அதற்குப் பதிலளித்த அவர்- மட்டக்களப்பு மாவட்டத்தில் சமாதான நல்லெண்ண நடவடிக்கைகள் முழுமையாக அமுல்படுத்தப்படவில்லை என்று குற்றம் சாட்டினார். அத்துடன் இவ்விடயம் தொடர்பகக இராணுவத்தினருக்கும் விசேட அதிரடிப் படையினருக்கும் இடையே முரண்பாடு காணப்படுவதாகவும் இந் நிலமை தற்போதைய நல்லெண்ண சூழ்நிலைக்கு பாதிப்பான விடயமென்றும் கூறினார். (இ)

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உள்ளூராட்சித் தேர்தல்

பற்றிய

# முக்கிய அறிவித்தல்

தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணி) ஆகிய நான்கு கட்சிகள் அடங்கிய தமிழ்த்தேசிய கூட்டமைப்பு எதிர் வரும் உள்ளூராட்சித்தேர்தலில் போட்டியிடுவதெனத் தீர்மானித்துள்ளது.

பின்வரும் சபைகளுக்கு தலைவர், உபதலைவர், மற்றும் உறுப்பினர்கள பதவிகளுக்கு போட்டியிட விரும்புவோர் தமது சுய விபரங்களுடன் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

1) யாழ்ப்பாணம் மாநகர சபை
2) வல்வெட்டித்துறை நகரசபை
3) பருத்தித்துறை நகரசபை
4) சாவகச்சேரி நகரசபை
5) ஊர்காவற்றுறை பிரதேச சபை
6) நெடுந்தீவு பிரதேச சபை
7) வேலணை பிரதேச சபை
8) வலிகாமம் மேற்குப் பிரதேச சபை
9) வலிகாமம் வடக்கு பிரதேச சபை
10) வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை
11) வலிகாமம் தெற்கு பிரதேச சபை
12) வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
13) வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை
14) பருத்தித்துறை பிரதேச சபை
15) சாவகச்சேரி பிரதேச சபை
16) நல்லூர் பிரதேச சபை

ஒவ்வொரு சபையிலும் போட்டியிடும் வேட்பாளர்களில் நாற்பது வீதத்தினர் (40%) 35வயதுக்குட்பட்டவர்களாக இருக்க வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்.

**விண்ணப்பங்கள்:**

தேர்தல் நியமனத் தெரிவுக்குழு,
தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு,
தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகம்,
57/48, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற விலாசத்திற்கு நாளை (05-02-2002) காலை 10மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரில் சமர்ப்பிக்கவும்

நேர்முக ஆய்வுக்கு தேவைப்படின் காலை 10 மணி முதல் மாலை 6மணி வரை சமுகமளிக்கத் தயாராக இருக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

-தேர்தல் நியமனத் தெரிவுக்குழு,
தமிழ்த் தேசிய கூட்டமைப்பு.

தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகம்,
57/48, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். (4441)


**மிக விரைவில் எதிர்பாருங்கள்**

## "வலம்புரியின் வாரமலர்"

உங்கள் எண்ணத்தில் சுரக்கும் கற்பனை ஊற்றை சுமந்து வருகிறது

- கவிதை
- சிறுகதை
- நாவல்
- கட்டுரை
- கேள்வி பதில்
- வியாதிக்கு விளக்கம்
- இலக்கிய நயம்
- மங்கையர் பகுதி
- பேனா நண்பர்கள்
- சிறுவர் சிந்தனை
- அரசியல் விளாசல்

(உங்கள் கேள்விகளுக்கு மருத்துவ நிபுணர்களின் பதில்)

**இன்னும் பல.. பல..**

உங்கள் ஆக்கங்களும் வலம்புரியின் வாரமலரில் இடம்பெற வேண்டுமா? விரைந்து அனுப்புங்கள்

**ஆசிரியர்**
வலம்புரி வாரமலர்

இல. 15, வெள்ளாந் தெரு,
யாழ்ப்பாணம்.

## வலைப்பந்தாட்டம் பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர்ஆசிரியர் சங்கத்தினால் யாழ் மாவட்டத்தில் நடத்தப்பட்டுவரும் ஆசிரியர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளில்இன்று நடைபெறவிருந்த வலைப்பந்தாட்டப் போட்டி காலநிலை சீரின்மையால் மறுஅறிவித்தல் வரை பிற்போடப் பட்டுள்ளதாக சங்கத்தின் பொதுச் செயலாளர்அறிவித்துள்ளார். (இ-5)

## தையல் பயிற்சி 310 பெண்கள் பயன்

(நவாலி)

வலி தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர்பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நடத்தப்பட்ட ஐந்து தையல் பயிற்சி நெறிகளில் பயின்று 310 பெண்கள் பயன் பெற்றுள்ளதாக பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அதிகாரி க. ஸ்ரீபதி தெரிவித்தார்.

தற்போது 6வது தையல் பயிற்சி நெறி நடைபெற்று வருவதாகவும் அதில்46பெண்கள் பயின்று வருவதாகவும் தையல் பயிற்சியுடன் அவர்களுக்கு விலங்கு வேளாண்மை ஐசிங் தலையலங்காரப் பயிற்சிகளும் வழங்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (உ- 228)

### உள்ளூராட்சி சபைகளுக்கு

# பொதுநோக்குடன் சேவையாற்றுவோரை ஏகமனதாகத் தெரிவுசெய்வோம்

## வடமராட்சி தொழில்சார் பண்பாட்டு பேரவை அறிக்கை

(மந்திகை)

நடந்து முடிந்த பொதுத் தேர்தல்போல அடுத்து வரவிருக்கும்உள்ளூராட்சித் தேர்தலிலும் கோஷ்டிச் சண்டைகள், கட்சிச் சண்டைகள் மீண்டும் தலைதூக்கி நாம் பலிக்கடாக்களாக்கப் பட்டு விடுவோமோ என மக்கள் பயப்படுகின்றனர்.

இவ்வாறு வடமராட்சி தொழில்சார் பண்பாட்டுப் பொது அமைப்புக்களின் பேரவை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

கடந்த பல வருடங்களாகக் கட்சித்தேர்தல் முறையினூடாக எமது கிராமங்கள் மிக குறைந்தளவே முன்னேறியுள்ளன கிராம முன்னேற்றத்தைவிட கட்சிமோதலையே நாம் அதிகம் கண்டிருக்கின்றோம் எங்கும் எதிலும் அடிதடியும் அழிவுமே அபிவிருத்தி அடைந்துள்ளன.

உள்நாட்டு யுத்தத்தின் கோரப்பிடியில் இருபதுவருடங்களாகச் சிக்கித் தவிக்கும் தமிழினம் மறுபுறம் தேர்தல் காலங்களில் தமிழ்க் கட்சிகளிடையே இடம்பெறும் உள்ளூர் யுத்தத்தினாலும் சீரழிந்து சின்னாபின்னப்படும் நிலை இனியும் தொடரத்தான் வேண்டுமா?எமது மண்ணில் உடனடியாக இதற்கு முடிவுகட்டியாகவேண்டும்.

அவரை இதுவரை நம்பியிராமல் தமிழினம் தனது தலைவிதியை தானே மாற்றியெழுத வேண்டும் தமது எதிர்காலத்தை தாமே தீர்மானிக்கவும் திட்மிடவுமான அதிகாரத்தைப் பெற்றெடுக்கத் தமிழ்மக்கள் திரண்டெழவேண்டும்.

உளூராட்சித் தேர்தலின் போது வட்டாரங்கள் தோறும் இருக்கக்கூடியபொது அமைப்புக்கள் ஒன்று சேர்ந்து தமதுவட்டாரத்துக்குள் நிரந்தரமாக வசிப்பவரும் பொது நோக்குடன் சேவையாற்றக் கூடியவருமான ஒருவரைத் தெரிவுசெய்து போட்டியற்ற முறையில் உளூராட்சிச் சபைகளுக்குப் பிரதிநிதியாக அனுப்பவேண்டும் அவ்வாறு அனுப்பப்படும் பிரதிநிதிகளில் ஒருவரையே சபைத் தலைவராகவும் தெரிவுசெய்ய வேண்டும். வட்டாரப் பிரதிநிதிகள் கட்சி,சாதி,சமய பேதங்களற்றுத் தெரிவு செய்யப்பட வேண்டும் அவர்கள் எந்தஅரசியற்கட்சியைச் சார்ந்தவராகவும் இருக்கலாம்.ஆனால் சுயேட்சையான ஒரேகுழுவாகவே இயங்கவேண்டும்.

சுயநலன், கட்சிநலன் என்பவற்றைப் புறந்தள்ளி பொது நலன் மற்றும் இனநலனை மட்டுமே முதன்மைப்படுத்திச் செயற்படஅனைத்துத் தமிழ்க் கட்சிகளும் இனியாவது முன்வரவேண்டும். பல்கலைக்கழக சமூகம், உயர்கல்வி கற்கும் மாணவ அமைப்புகள், மத பீடங்கள் போன்ற அமைப்புகள் உள்ளூராட்சித் தேர்தல் விடயத்திலும் அக்கறை கொள்ள வேண்டும். அரசியற் கட்சிகளை உள்ளூராட்சித் தேர்தலில் பங்குபற்றாது ஒதுங்கியிருக்கும்படி கேட்க வேண்டும்.

உள்ளூராட்சிச் சபைகளுக்குப் பிரதிநிதிகள் போட்டியின்றித் தெரிவு செய்யப்படுகையில் இத்தேர்தலுக்காகச் செலவிடப்படும்கோடிக்கணக்கான ரூபாய்ப் பணத்தையும் மீதப்படுத்தமுடியும். தேர்தல் திணைக்களத்திடமிருந்து இப் பெருந்தொகைப் பணத்தைப் பெற்று எமது பிரதேச அபிவிருத்திக்கு அதனைப் பயன்படுத்த முடியும். மக்களையும் மக்கள்நலனில்அக்கறையுள்ளவர்களையும் அரசியற் கட்சிகளையும் இதைப் பற்றி நன்கு சிந்தித்துச் செயற்படுமாறு கேட்டுக் கொள்கின்றோம் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## யாழ்ப்பாணத்தில்

துள்ளார்.

பலவருடங்களாக கடலில் சென்று மீன் பிடிப்பதற்கு போடப்பட்டிருக்கும் தடையினால் மீனவர்கள் சொல்ல முடியாத பல கஷ்டங்களை அனுபவித்துவருகின்றார்கள்.

கடந்தகால அரசாங்கத்திற்கு இவ்விடயம் குறித்து பலகோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் எத்தகைய பயனும் கிடைக்கவில்லை.

இவ்விடயத்தில் தாங்கள் தக்கநீதிவழங்குவீர்கள் என்று மீனவர்கள் எதிர்பார்கின்றார்கள்.எனவே தங்களதுபல கடமைகளின் மத்தியில் குறுக்கீடு செய்வதாக இருப்பினும் யாழ்ப்பாணத்து இன்றைய நிலை மிகவும் அவசரமாகக் கவனிக்கப்பட வேண்டியுள்ளது என்பதால் அதுகுறித்து தங்களுக்கு அறியத்தருகின்றேன் என்று மேலும் அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# தென்மராட்சியில் மீள்குடியேற புலிகள் பச்சைக்கொடி காட்டவில்லை

## தென்மராட்சி பிரதேச செயலர் அறிவிப்பு

(தென்மராட்சி).

அரசுக்கும் புலிகளுக்கும் இடையில் உடன்படிக்கைஏற்படாதவரை தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக் குடியமர முடியாது எனவே இவ் விடயத்தில் தென்மராட்சிப் பிரதேச மக்கள் அவசரப்படக் கூடாது.

தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளைநேற்றைய தினம் சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் இடம்பெற்ற கூட்டமொன்றில் கருத்துரை வழங்கும்போது இவ்வாறு குறிப்பிட்டார்.

தென்மராட்சி நலன் விரும்பிகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக்கூட்டம் பல்கலைக்கழக பேராசிரியர் க. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

பிரதேச செயலர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது,

தென்மராட்சி பிரதேச மீள் குடியமர்வு தொடர்பாக புலிகள் இன்னமும் பச்சைக் கொடி காட்டவில்லை. எனவே அங்கு மக்களைப் போய் இருக்கும்படியோ அல்லது போகாதிர்கள் என்றோ நான்கூற முடியாது.

அதேபோல, அரச திணைக்களங்களும் அவசரப்பட்டு தென்மராட்சியில் செயற்பட ஆரம்பிக்கப்படமாட்டாது. தென்மராட்சியின் மீள்குடியமர்வு பற்றி காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

தென்மராட்சியின்வளங்கள் யாவும் அழிக்கப்பட்டுவருகின்றன. இவை பாதுகாக்கப்பட வேண்டும். நாம் ஒன்றுமே செய்ய முடியாமல் இருக்கின்றோம். எம்மிடம் இதற்கான அதிகாரமும் இல்லை.

வடமராட்சி, வலிகாமம் பிரதேசங்களில் இருந்துசுமார் 400க்கு மேற்பட்ட தென்மராட்சி மக்கள்இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். (ந-77)

## இன்று 54வது சுதந்திர தினம்

(கொழும்பு)

இலங்கையின் 54வது சுதந்திரதின வைபவம் இன்று தலைநகர் கொழும்பில்நடைபெறுகிறது.

சுதந்திர தின வைபவத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பிரதம விருந்தினராக கலந்து கொள்கிற அதேசமயம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும்கலந்துகொள்கிறார் சுதந்திர தினக் கொண்டாட்டங்களை அடுத்து கொழும்பு நகரம் பலத்த பாதுகாப்புகுட்படுத்தப் பட்டிருக்கிறது. (வ)

## சிற்றூர்திகள் சங்க கூட்டம்

(மந்திகை)

வடமராட்சி போக்குவரத்து சிற்றூர்திகள் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை காலை 9 மணிக்கு பருத்தித்துறை பஸ் நிலைய மேல் மாடிக்கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அனைத்து மினிபஸ் உரிமையாளர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு சங்கத்தின் தலைவர் எஸ். சில்வஸ்ரார் கேட்டுள்ளார். (ந-5-23)

## அதிபர்கள் கூட்டம்

(கோப்பாய்)

கோப்பாய்க் கோட்டப் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் நாளை முற்பகல் 11.30மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியில் நடைபெறுமென கோப்பாய் கோட்டக்கல்வி அதிகாரி இ. சிவஞானசுந்தரம் அறிவித்துள்ளார். (ந)

# கண்ணிவெடி, மிதிவெடிகளை அகற்றுவதில் படையினர் ஈடுபாடு

## யாழ்.பாதுகாப்புத் தலைமையகம்அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில்புதைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகள் பொறிவெடிகள் என்பவற்றை அகற்றுவதில் படையினர் விரைந்து செயற்படுகின்றனரென்று, பலாலி படைத்தள யாழ் பாதுகாப்புத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து யாழ் பாதுகாப்புத் தலைமையகம் நேற்று செய்திக்குறிப்பொன்றை அனுப்பி வைத்துள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

யாழ். குடாநாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் வகையிலும் மக்களுக்கு அச்சுறுத்தலாக காணப்படும் மிதி வெடிகளையும் கண்ணிவெடிகளையும் அகற்றுவதில் பாதுகாப்புப் படையினர் 1995ம் ஆண்டு முதல் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளனர். இதன்படி கடந்த வருடம் கொழும்புத்துறை, சாவகச்சேரி, முகமாலை மற்றும் யாழ்ப்பாண நகரத்திற்கு அருகிலும் புதைக்கப்பட்டிருந்த ஆட்களுக்கெதிரான குண்டு (மிதிவெடி) 25,906 மற்றும் இராணுவ கவசவாகனங்களை தகர்க்கப் பயன்படுத்தும் வெடிகுண்டு 156 மேலும் வெடிக்காத நிலையில் காணப்பட்ட பலரக வெடிகுண்டுகள் 1164 என்பவற்றை இராணுவத்தின் வெடிகுண்டு செயலிழக்கச் செய்யும் பிரிவினர் கைப்பற்றி செயலிழக்கச் செய்துள்ளனர்.

அவ்வாறு கண்ணிவெடிகள் மீட்கப்பட்டமையினால் பெரும் எண்ணிக்கையான மக்களின் உயிர் பாதுகாக்கப்பட்டுள்ளது. எனினும் கடந்த 2001ம் வருடத்தில் மாத்திரம் குடாநாட்டில் வெடி பொருட்களால் 46 பேர் படுகாயமடைந்துள்ளதுடன், ஒருவர் உயிரிழந்துள்ளார். சாதாரண மக்களுக்கு ஏற்படும் இவ்வாறான தீய விளைவுகளைத் தடுக்கும் முகமாகவே பாதுகாப்புப் படையினரால் மிதிவெடி இல்லை என உறுதி செய்யப்படாத இடங்களில் எச்சரிக்கை விளம்பரப்பலகை தொங்கவிடப்பட்டுள்ளதுடன், மேலும் சில இடங்கள் நடமாடத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான அறிவித்தல்களை கவனத்தில் எடுக்காது, தடை செய்யப்பட்ட பகுதிக்குள் நடமாட முயற்சித்தவர்களே கூடுதலாக காயமடைந்துள்ளமை தெரியவந்துள்ளது தற்போது சமாதான சூழ்நிலை ஏற்பட்டுள்ள இந்த சந்தர்ப்பத்தில் இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தமது நிரந்தர வசிப்பிடங்களில் குடியமர விருப்பம் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் அங்கும் ஏனைய இடங்களிலும் புதைக்கப்பட்டிருக்கும் கண்ணி வெடிகளையும் மிதி வெடிகளையும் அகற்றும் நடவடிக்கைகளை படையினர் விரைவாக முன்னெடுத்துச் செல்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

# நிஹால் கருணாரத்தின நீதிமன்றில் நேற்று சரண்

(கொழும்பு)

ஜனாதிபதியின் பாதுகாப்புப்பிரிவின் பணிப்பாளர் நிஹால் கருணாரத்ன நீதிவான் ராஜபக்ஷ முன்னிலையில் நேற்று சரணடைந்துள்ளார்.

நீதிவான் முன்னிலையில் சரணடைந்த நிஹால்கருணாரத்ன சரீரப்பிணையில் விடப்பட்டு அடுத்த தவணைக்கு ஆஜராகுமாறு நீதிவான் உத்தரவிட்டார். (வ)

# திருடர்களைக் கண்ட பெண்ணுக்கு கத்திக்குத்து

(செம்பியன்பற்று)

வீடொன்றில் புகுந்த திருடர் கோஷ்டியொன்று சுமார் அறுபதாயிரம் ரூபா பெறுமதியான நகைகள் மற்றும் பணம் என்பவற்றை திருடிச்சென்றுள்ளனர்.

இச்சம்பவம் பருத்தித்துறை மாதனைப் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

மேற்படி வீட்டினுள் புகுந்த திருடர் கோஷ்டி பொருட்களை திருடிக் கொண்டு புறப்பட்ட சமயம் அதைக்கண்ட அவ்வீட்டுப் பெண் கூக்குரலிட்டு கத்தியுள்ளார். இதனால் அப்பெண்ணை திருடர்கள் கத்தியால் குத்தியுள்ளனர்.

வயிற்றில் கத்திக்குத்துக்கிலக்காகிய பிரஸ்தாபபெண் தற்போது மந்திகை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-42-4)

# மிதிவெடிகளும், இராணுவவேலிகளும்

# இன்னமும் அகற்றப்படாத சுன்னாகம்

## அமைச்சர் ஜயலத்திற்கு அவசர கடிதம்

(யாழ்ப்பாணம்)

கடந்தகால போர்க்கால சூழ்நிலையின்போதுஏற்பட்ட தாக்கங்களினால் எமது பகுதியில் குடியிருந்த மக்களினுடைய வீடுகள் உடமைகள் அழிக்கப்பட்டு ஏறக்குறைய 150க்கும் மேற்பட்ட குடும்பங்கள் முற்றாக வீடிழந்தும் கடுமையான பாதிப்புக்களுக்கும் உள்ளாகியிருக்கின்றனர். இதனால் எமது பகுதிமக்கள் வாழ்விடம் இன்றி ஊர் ஊராக அலைந்து திரிகின்ற நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்,

கடந்த சில வருடங்களாக சில பொது ஸ்தாபனங்களினாலும், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் வேறு பிரதேசங்களில் இவ்வாறு பாதிப்புக்கு உள்ளான மக்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டும் வேறு வகையில் பல உதவிகள் செய்துகொடுக்கப்பட்டும் வருகின்றன.

அப்படியிருந்தும் எமது பகுதிமக்களுக்கு இவ்வாறான எதுவித உதவிகளும் எந்த ஸ்தாபனங்களினாலும் இன்றுவரையும் வழங்கப்படவில்லை என்பதைக் குறிப்பிட்டுக்காட்ட விரும்புகின்றோம். இவ்வாறு சுன்னாகம் நகர மத்திஐக்கிய அபிவிருத்தி சனசமூக நிலையம் உடுவில் 513 வது இராணுப்பிரிவு கட்டளை அதிகாரி ஊடாக புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் டாக்டர்ஜயலத்ஜயவர்த்தனாவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

எமது நகரம் யாழ் நகரத்துக்கு அடுத்தபடியாக இரண்டாம் இடத்தை வகிக்கின்ற இடமாகஇருந்தும் எமதுபகுதியில் அமைக்கப்பட்ட காப்பரண்களும் கண்ணிவெடிகளும் மிதி வெடிகளும் அகற்றப்படாமல் இருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாக இருக்கிறது. எமது பகுதி சுன்னாகத்தின் முகப்பில் அமைந்திருப்பது இன்றும்போர்க்காலச் சூனியப் பிரதேசமாகக் காட்சியளிப்பது மிகவும்வேதனைக்கும் மக்கள் வாழ்வின்துன்பத்துக்கும்உரியஒருநிலையாகும்.

எனவே எமது மக்களுக்கு நல்லதொரு வாழ்வு கிடைக்க நிம்மதியான ஒரு சூழ் நிலை கிடைக்க வீடுகள் இருந்த இடங்களை அவர்கள் சென்று பார்வையிடவும் கைவிடப்பட்ட நிலையிலுள்ள இராணுவ வேலிகளையும் கண்ணிகளையும் அகற்றி மூடப்பட்டுள்ள பாதைகளையும்திறந்து மக்கள் பாவனைக்கு உகந்ததாக சீரமைத்து அவர்கள் மீளக் குடியமர்வதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தர உரிய நடவடிக்கைகளை செய்து தருமாறு எமதுமக்கள் சார்பாக மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

---

இன்று நடைபெறும் சுதந்திர தினத்துக்கான கவிதையாகும்.

## சுதந்திர சுவாசம் நடக்கட்டும்

கட்டிய அசவினில் தூக்கிய ஏரெடுத்து
வலிய தோள்களில் சாய்த்துவிட்டு
பட்டியில் கட்டிய காளையின் நாண்பிடித்து
ஒடுங்கி நிமிர்ந்த ஒற்றை வரப்பினில் கால்பதித்து
கழனிசென்று உவகையாய் உடல்வருத்தி
சிந்திய வியர்வையை ஆதவன்நிழலில் உதிர்த்துவிட்டு
செழித்த பயிரின் அறுவடையினில் என்றும்
ஆனந்தமாய் வாழ்ந்த தமிழினம் நாம்
கந்தகமற்ற சுதந்திரக் காற்றினை என்றும்
சுதந்திரம் என்று சுகந்தமாய் நாம் சுவாசிக்க
எம் சொந்தங்களும் சொத்துகளும் இடிகரையாக
இயந்திரங்கள் மீதொரு சுதந்திரம் வேண்டாம்
'ஷெல்' போன பாதையில் சிறுகுருவி கூடுகட்டி
'டாங்கி' கிளறிய பாதையில் பயிர்கள் முளைவிட
கண்ணிவெடி வெடித்த கிடங்கினில்
நீர் நிறைந்து நீலோற்பவம் மொட்டவிழ்க்க
இனிமேல் போரின்றி...காற்றினில் கந்தகமின்றி..
இனிதாய் சுதந்திர சுவாசம் என்றுமே நடக்கட்டும்

யதார்த்திகன்
கொக்குவில்

---

## பிறந்த நாள் விழா

(கொழும்பு)

சர்வதேச இந்துமத குரு பீடாதிபதி சபரிமலைக் குருமணி 'சிவாகம கலாநிதி' ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்ப சிவ சிவாச்சாரியாரின் 44 ஆவது பிறந்தநாள் விழா கடந்த 30ந் திகதி கொழும்பில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கப்பித்தாவத்தை பிரம்மஸ்ரீ பா. சண்முகரட்ண சர்மா, சுன்னாகம் சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள், இணுவில் சிவஸ்ரீ பா. ஜெகன்நாதக் குருக்கள், தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கையம்மன் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக்குருக்கள், சிவஸ்ரீ க. சிவபாலக்குருக்கள், இந்து கலாசார அமைச்சர் மகேஸ்வரன், முன்னாள் அமைச்சர் அல்ஹாஜ் அலவிமௌலான கொழும்பு மாநகர முன்னாள் பிதா கே. கணேசலிங்கம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஜெ. திவ்வியநாதன், ஜிந்துப்பிட்டி முருகன் கோவில்தர்மகர்த்தா தேசபந்து வி. ரி. வி. தேவநாயகம்பிள்ளை, கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தான தர்மகர்த்தா டி. எம். சுவாமிநாதன், மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தான தர்மகர்த்தா பொன். வல்லிபுரம், கொழும்பு கதிரேசன் வீதி ஸ்ரீ கதிரேசன் கோவில் தர்மகர்த்தா கு. வீரசுப்பிரமணியம் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட சிவாச்சாரியார்கள் ஆலய தர்மகர்த்தாக்கள், சைவப்பெரியார்கள் பக்தர்கள் பொன்னாடை போர்த்தி மலர்மாலை அணிவித்து குரு பீடாதிபதிகளின் ஆசியைப் பெற்றுக்கொண்டனர். (உ)

## "தமிழ் எங்கள் உயிர்" மன்னாரில் எழுச்சி விழா

(மன்னார்)

ஈ.பி.ஆர்.எல்.எவ் சுரேஸ் அணியின் அனுசரணையுடன் மன்னார் மாவட்டத்தில் இம்மாதம் முதலாம் திகதி முதல் ஒருவார காலத்திற்கு 'தமிழ் எங்கள் உயிர்' எழுச்சி விழா இடம் பெற்று வருகின்றது.

இறுதி நாள நிகழ்வு எதிர்வரும் 7ஆம் திகதி வியாழக்கிழமை பி.ப 4.00மணிக்கு முத்தரிப்புத்துறை விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (உ)

## அபிவிருத்தி தொண்டர்களுக்கு

# அறிமுக எழுத்துப் பரீட்சை பெப்.11-இல் நடைபெறும்

(மானிப்பாய்)

அபிவிருத்தித் தொண்டர்களாக நியமனம் பெற்ற 1வது தொகுதியினருக்கான அறிமுக எழுத்துப் பரீட்சை இம்மாதம் 11ஆம் திகதி அந்தந்தப்பகுதி பிரதேச செயலகங்களூடாக நடைபெறவுள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் தத்தமது பகுதி பிரதேச செயலகங்களுடன் தொடர்பு கொண்டு பரீட்சைக்கான ஆயத்தங்களை மேற்கொள்ளுமாறு வலி தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகன் கேட்டுள்ளார். (செ-120)

## மன நோயாளர் விடுதியை பொலிஸார் பொறுப்பேற்பு

(மானிப்பாய்)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலையின் மனநோயாளர் விடுதியை பராமரிக்கும் பணிகளைபருத்தித்துறைப்பொலிஸார்இன்று பொறுப்பேற்க உள்ளனர்.

அரசாங்கத்தின் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் இலங்கையின் சுதந்திர தினமான இன்று மேற்படி விடுதியின் பராமரிப்புப்பணிகளைப் பொறுப்பேற்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அண்மையில் வைத்தியசாலைசுற்றாடலைச் சிரமதானம் மூலம் பொலிஸார் துப்புரவு செய்ததுடன் மனநோயாளிகளுக்கு உணவு வகைகளையும் வழங்கியிருந்தனர். (உ-232)

## மழை ஒழுக்கினால் மல்லாவி மருத்துவமனை நோயாளர் அல்லல்

(வவுனியா)

கடந்த சில தினங்களாக பெய்துவரும் மழையினால் மல்லாவி மருத்துவமனையில் ஆங்காங்கே ஒழுக்குகள் ஏற்பட்டு விடுதியில் தங்கியுள்ளோர்பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

மூன்று வாரங்களுக்கு முன்னர் ஏற்பட்ட தொடர்மழையின் போதும் இவ்விதமான குறைபாடு நிலவியதாகவும், அப்போது இதுகுறித்து சம்பந்தப்பட்ட தரப்புகளுக்குச் சுட்டிக்காட்டிய போதிலும் இற்றைவரை சரியான நடவடிக்கை எதுவும் எடுக்கப்படாமை குறித்தும் வைத்திய சாலை நிர்வாகம் சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், இரணைமடுக்குளத்தின்நீர்மட்டம் உயர்ந்து எந்நேரமும் கதவு திறக்கப்படும் நிலையில் உள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## தரைமட்டமாக்கப்பட்ட கட்டடங்களை மீண்டும் நிர்மாணிக்கத் திட்டம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக் காலத்தில்இடித்துத் தரைமட்டமாக்கப்பட்ட கடைகள், கட்டடங்களை மீண்டும் நிர்மாணிக்கஐ.தே. முன்னணி அரசு முன்வந்துள்ளது.

வீதி விஸ்தரிப்பு மற்றும் அரச காணிகளில் அத்து மீறல் என்ற காரணங்களால் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்ட கட்டடங்களே குணசிங்கபுர உலக சந்தை ஆகிய பகுதிகளில் மீண்டும் நிர்மாணிக்கப்படவுள்ளதாக நகரபொது வசதிகள் அமைச்சர் முகமட் மஹ்ரூப் தெரிவித்துள்ளார். (உ)

## கிராம அலுவலர் இடமாற்றம்

(மானிப்பாய்)

தீவுப் பகுதியில் பணி புரிந்த இரு கிராம சேவை அலுவலர்கள் இம்மாதம் முதல் சண்டிலிப்பாய் மற்றும் கோப்பாய் பிரதேச செயலகங்களுக்கு யாழ் அரச அதிபரினால் உடனடி இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் பணியாற்றிய திருமதி ஜே. பிறேசியா சண்டிலிப்பாய்க்கும் கே. துரைராசா வேலணையிலிருந்துகோப்பாய்க்கும்இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (க-120)

## சலனசித்திரம் நிர்வாகக் குழு தெரிவு

(யாழ்ப்பாணம்)

திரைக்கலைச் சங்கங்களின் சம்மேளனமான' சலன சித்திரம்' நிறுவனத்தின் யாழ் பிரதேசக் கிளையின் அங்குரார்ப்பணக்கூட்டமும், நிர்வாகக்குழுத் தெரிவும் கடந்த 25ம் திகதி ஆரியகுளம் புதிய உயர்கல்லூரியில் நடைபெற்றது.

9 பேர் கொண்ட நிர்வாகக்குழுவில் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

பொதுச்செயலாளர் - எம். ஷாந்தன் சத்திய கீர்த்தி, மேலதிகச் செயலாளர் - எஸ். எம் இராஜேஸ்கனி, நிதிச் செயலாளர் - பி.கந்தமூர்த்தி நிர்வாகச் செயலாளர் - எஸ் சத்தியசீலன், பிரசார செயலாளர் - எஸ்.செபரத்தினம், கல்விச் செயலாளர் - எஸ். கஜேந்திரன், தொழில்செயலாளர் - ஜே.செல்வநாயகம் மகளிர் விவகாரச்செயலர் - ஏ ரஜனி, சிறுவர் விவகாரச் செயலர் - என்.குமுததாஸ். (உ - 106)

## பிரசங்கியார் கொழும்பு வருகை

(மானிப்பாய்)

அனைத்துலக வேதாகம ஆசிரியரும் புகழ்பெற்ற பிரசங்கியுமான வண. செல்வின் ஹியூஸ் நாளை செவ்வாய்க்கிழமை கொழும்புவருகிறார்.

ஐக்கிய அமெரிக்கா, நைஜீரியா ஆகிய நாடுகளுக்கான தனது குறுகிய கால விஜயத்தை முடித்துக் கொண்டு நாளை கொழும்புவரும்இவர் இலங்கையில்தனதுஇறைபணி முடிந்ததும் இந்தியா செல்லவுள்ளார். (க-232)

## செய்தியாளரை கண்டுபிடிக்க

# அமெரிக்க, பாகிஸ்தானிய பொலிஸார் கூட்டாக தேடுதல் நடவடிக்கை

பாகிஸ்தானில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட அமெரிக்க பத்திரிகையாளரான டானியல் பேணை தேடிக் கண்டுபிடிக்கும் தீவிர நடவடிக்கையில் பாகிஸ்தானிய பொலிஸாரும் அமெரிக்க பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் உள்ள தலிபான் தூதுவரை விடுதலை செய்யுமாறும் 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை கப்பமாகவழங்க வேண்டுமென்றும் தீவிரவாதிகள் இவரை விடுவிக்க நிபந்தனை விதித்துள்ளமை தெரிந்ததே.

இதேவேளை டானியல் பேண் கொலைசெய்யப்பட்டுவிட்டதாக பிறிதொருசெய்தி வெளியாகியுள்ளது.

இந்த நிலையில் அது தொடர்பாக தாங்கள் ஆராய்ந்து வருவதாக பாகிஸ்தானின் பொலிஸ்மா அதிபர் பாரூக் ஜமீல் தெரிவித்துள்ளார்.

இதேவேளை டானியல் பேண் கடத்தப்பட்டமை தொடர்பில் கைது செய்யப்பட்ட முஸ்லிம் தீவிரவாத அமைப்பின் தலைவரான முபாரக் அலிஷா கிலானியை பொலிஸார் துருவித்துருவி விசாரணை நடத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விசாரணைகளின் அடிப்படையிலேயே டானியல் பேண் கடத்தி வைக்கப்பட்டிருக்கும் இடத்தைகண்டுபிடிக்கும் தீவிர முயற்சியில் அமெரிக்கா, பாகிஸ்தான் பொலிஸார் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ5)

## கிணற்றில் வீழ்ந்து குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

கிணற்றில் தண்ணீர்அள்ளிக் கொண்டிருந்த குடும்பஸ்தர் கிணற்றில் தவறி விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற இச்சம்பவத்தில் வேம்படி வீதி மானிப்பாய் யைச் சேர்ந்த செல்வநாயகம் சச்சிதானந்தம் (வயது-56) என்பவரே உயிரிழந்தவராவர். (இ- 19)

# ஏழைச் சிறார்களின் கல்விமேம்பாட்டிற்கு பாடுபட வேண்டியது மிக அவசியம்

### மக்கள் அபிவிருத்தி மன்ற அங்குரார்ப்பண விழாவில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா நாட்டில் வறுமைக் கோட்டின் கீழ் வாழுகின்ற ஏழைச் சிறார்களின் கல்வி மேம்பாட்டிற்காகவும், அச்சிறார்களின் வாழ்க்கைத் தர உயர்விற்காகவும் பாடுபட வேண்டியது அவசிய தேவையாக உள்ளது.

யாழ்ப்பாணம் வஸ்தியான் ஹோட்டலில் நேற்றுக் காலை இடம்பெற்ற மக்கள் அபிவிருத்தி மன்ற அங்குரார்ப்பண விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய அவ் அமைப்பின் செயலர்எஸ்.சின்னத்துரை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். மாநகரசபை முன்னாள் உதவி முதல்வர் பி. எவ். சேவியர் தலைமையில் இடம்பெற்ற மேற்படி விழாவில் அவர் மேலும் உரையாற்றுகையில்;

நீண்டகால யுத்த அனர்த்தத்தால் சிக்கி சீரழிந்துள்ள யாழ்ப்பாண மக்களின் பொருளாதார அபிவிருத்தி குறித்து ஆக்கபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

யாழ்ப்பாணக் குடா நாட்டில் எத்தனையோ தொழில் நிறுவனங்கள் செயற்பட முடியாத நிலையில் உள்ளன. மேலும் பல நிறுவனங்கள் நட்டத்தில் இயங்கி வருகின்றன அவற்றுள் திக்கம் வடிசாலையும் ஒன்றாகும்.

இவ் வடிசாலை சிறப்புடன் இயங்க வேண்டியது அவசியமாகும். இதற்கு வேண்டிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு நாம் எமது பங்களிப்பை கட்டாயம் வழங்குவோம் என்றார்.

பிரமுகர்கள் மற்றும் பார்வையாளர்கள் பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (க-19)

# பின்தங்கிய பல பாடசாலைகளில் ஆங்கிலபாட போதனை இல்லை

### பெற்றோர் அதிருப்தி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தின் பின் தங்கிய பல பாடசாலைகளில் ஆங்கிலபாடம் கற்பிக்கப்படுவதில்லையெனசம்பந்தப்பட்ட மாணவர்களின் பெற்றோர் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் மேலும்தெரிவிக்கையில்2002 ஆம் ஆண்டு ஆரம்பித்து ஒரு மாதம் கடந்த நிலையிலும் கூட ஆங்கிலபாடம் கற்பிக்கப்படாதது குறித்து பலத்த அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இதேவேளை பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களாக கடமையாற்றிய பலருக்கு மீள நியமனம் இதுவரையில் வழங்கப்படவில்லையெனவும் இதுவிடயம்தொடர்பாக சம்பந்தப்பட்ட திணைக்களத்திற்கு சென்றால் பொறுப்புணர்வற்ற நிலையில் பதில் அளிக்கப்படுவதாகவும் பாதிக்கப்பட்ட பகுதிநேர ஆங்கில ஆசிரியர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

ஆங்கில பாடத்தின் அவசியம் பல தரப்பினராலும் வலியுறுத்தப்பட்டு வருகின்ற இவ் வேளையில் ஆங்கில பாடம் கற்பிக்க போதிய ஆளணியினரை நியமிக்க வேண்டியது சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் பொறுப்பு என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க)

### புலிகள்தோல்வியடைய அனுமதிக்ககூடாது

# எம்.ஜி.ஆரின் இந்த விருப்பத்திற்கு ஜெயா மாறாக நடப்பது தவறு

### அமெரிக்கத் தமிழர் கடிதம்

(கொழும்பு)

புலிகள் இயக்கம் தோல்வியடைய அனுமதிக்கக் கூடாது என்ற எம்.ஜி.இராமச்சந்திரனின் விருப்பத்திற்கு செல்வி ஜெயலலிதா மாறாக நடக்க கூடாது.

இந்த இறுதி விருப்பத்தை தீர்த்து வைப்பதனாலேயே அவரின் ஆத்மா சாந்தியடையும்.அமெரிக்காவில் வசிக்கும் ஈழத் தமிழரான இராமலிங்கம் சண்முகலிங்கம் என்பவர் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகச் செயலாளர் செல்வி ஜெயலலிதாவுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அக்கடிதத்தில்மேலும்குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

ஈழத்தமிழர்களின் உரிமைகள் அங்கு நசுக்கப்படுகின்றன அவர்களின் உரிமைகளை உரியவகையில் பெற்றுக் கொடுக்க எம்.ஜி.இராமச்சந்திரன் இறுதி வரை பாடுபட்டார்.

அவர்களுக்காக பண்ருட்டி ராமச்சந்திரனும் எம்.ஜி. ஆரும் ஐக்கிய நாடுகள் சபை வரை சென்று குரல் கொடுத்ததைத் தாங்கள் மறந்து விடமாட்டீர்கள்.

இந்நிலையில் அரசு-புலிகள் சமாதானப் பேச்சுக்களை தமிழ்நாட்டில் நடத்துவதற்குத் தாங்கள் முழு அளவில் எதிர்ப்புத் தெரிவித்துவருவது எமக்குப் புரியாத புதிராகவே உள்ளது.

உலக நாடுகள் பலவும் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதில் தம் ஆதரவை வழங்கி வரும் இச்சந்தர்ப்பத்தில் அதற்கு மாறாக நடப்பது முறையல்ல என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனநாயக உணர்வில்இலங்கைத்தமிழர்களைப்பாதுகாக்கவும் சட்ட ரீதியாக உரிமைகளை உறுதிப்படுத்தவும் நிலையான தீர்வொன்று காணப்படும்.

அத்துடன் இலங்கை மக்கள் அனைவரும் பூரணமாக சம உரிமைகளோடு வாழ வழி பிறக்கும் என்று நான் நம்புகிறேன் என்று ஐ.நாவில் எம்.ஜிஇராமச்சந்திரன் ஆற்றிய உரையின் பகுதியும் அக்கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ)

# பிரதமநீதியரசரை பதவி விலக்கக்கோரிக்கை

(கொழும்பு)

பிரதம நீதியரசர் சரத்என் சில்வாவை பதவி விலக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜனநாயக இடது சாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார இவ்வாறு ரணில் அரசைகோரியுள்ளார். ஜனாதிபதி இவரைப் பிரதம நீதியரசராக நியமித்த போது அவரது நியமனத்தை இரத்துச் செய்யுமாறு அப்போதுஎதிர்க்கட்சியாகவிருந்த ஐ.தே.க. அடிக்கடி குரல்கொடுத்து வந்தது.

ஆனாலும், பல்வேறு குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் பிரதம நீதியரசரைப் பதவி விலக்க தற்போது ஆட்சிபீடம் ஏறியுள்ளதாங்கள்தயங்குவதுஏன் எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார். (உ)

# சுதந்திர தினத்தை ஒட்டி கொழும்பில் பாதுகாப்பு

(கொழும்பு)

கொழும்பில் இன்று நடைபெறவுள்ள 54 வது சுதந்திர தினக் கொண்டாட்டத்தை அடுத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக கொழும்பு பிராந்திய பொலிஸ்மா அதிபர் போதி லியனகே தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்; ஆயிரக் கணக்கான பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்படுவர் என்றும், கொழும்பிற்கும் ஏனைய இடங்களுக்குமான போக்குவரத்துப் பாதைகளில் கண்காணிப்புகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார்.

எந்த நிலைமையையும் சமாளிக்கும் வகையில் முப்படையினரும் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்புத்துறைச் செய்திகள் தெரிவித்துள்ளன. (க)

# சித்திர ஆசிரியர் இல்லை

(யாழ்ப்பாணம்)

யாழ். கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் சித்திர பாடம் போதிப்பதற்கான ஆசிரியர் எவரும் தற்போது கடமையில் இல்லாத காரணத்தினால் மேற்படி பாடம் பயிலும் மாணவர்கள் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளனர்.

மேற்படி பாடசாலையில் சித்திரபாடம் போதித்து வந்த ஒரே ஒரு ஆசிரியரும் தற்போது ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்குத் தெரிவாகியிருப்பதால் இந்தநிலை ஏற்பட்டுள்ளது. (உ)


## மணிவிழா ஆலோசனைக் கூட்டம்

யாழ்ப்பாணத்தின் கல்விமான்களில் ஒருவரும்
யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரும்
யாழ். மாவட்டத்தில்
உயர் கல்வி தரத்தை உயர்த்த அயராது
உழைத்து வருபவருமாகிய
பேராசிரியர்
**பொன். பாலசுந்தரம்பிள்ளை**
அவர்களுக்கு
மணிவிழா எடுக்க

அவரின் அபிமானிகளும், வியப்போரும் பெரிதும் விரும்புவதால் இதையிட்டு ஆலோசிப்பதற்கு அன்னாரின் அன்பர்களும், மாணவர்களும், ஆர்வலர்களும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

இடம்:
**நல்லை ஆதீனம்**

காலம்:
**இன்று 04. 02. 2002 பி. ப. 4 மணி**

அழைப்பாளர்
**க. சிவராமலிங்கம்**
முன்னாள் பிரதி அதிபர்
யாழ். இந்துக் கல்லூரி

(C-3436)


# சூடடிக்கும் இயந்திரத்தின் பயன் அதிகரிக்க வாய்ப்பு

(காரைநகர்)

காரைநகர் மேற்குவிவசாய சம்மேளனத்திற்கு கடந்த வருடம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினால் வழங்கப்பட்ட மனித வலுவால் இயக்கக்கூடிய சூடு அடிக்கும் இயந்திரம் மீளப்பெறப்பட்டுள்ளது.

எளிதாக இடம் மாற்றும் வகையில் சக்கரங்களை இணைப்பதற்காகவேமேற்படி இயந்திரம் மீளப்பெறப்பட்டதாகவும்,

சக்கரங்கள் பொருத்தப்படுவதன் மூலம் அதன் பயனைப் பெறும் விவசாயிகள் எண்ணிக்கை அதிகரிக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (உ -246)

### மீனவர் போராட்டத்தினால்

# யாழ்ப்பாணத்தில் பதற்றசூழல்

# பிரதமரை தலையிடக் கோரிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் மீனவர்கள் யாழ்செயலகம்,யாழ்பிரதேசசபை அலுவலகம் ஆகியவற்றின் முன்னால் சத்தியாக்கிரகம் செய்துவருவதால் பதட்டமான சூழ்நிலை அங்குஉருவாகிவருகின்றது.

எனவே வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்துடன் தொடர்புகொண்டு மீனவர்களின் குறைபாடுகள் விரைவில் நீக்கப்படும் என்று உறுதியளிக்குமாறு தங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தமிழர்விடுதலைக்கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மு.சிவசிதம்பரம் பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவிற்கு நேற்று அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்

(3-ஆம் பக்கம் பார்க்க)

# வைத்திய அதிகாரிகள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் அரசினர் மத்திய மருந்தகத்திற்கு வைத்திய அதிகாரியாக டாக்டர் ஆறுமுகம் திருநாவுக்கரசு கடந்த 24ஆம் திகதி முதல் பொறுப் பேற்றுள்ளார்.

சுன்னாகத்தில் மத்திய மருந்தகத்தில் வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய ம.சந்திர சேகரம் தெல்லிப் பழை மாவட்ட வைத்திய சாலைக்கு இடமாற்றம் பெற்றுள்ளார். (க)

## பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

(காரைநகர்)

காரைநகர்மருதடி வீரகத்தி விநாயகர்தேவஸ்தான பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று நடைபெறவுளது.

தேவஸ்தான பிரதம குரு சிவஸ்ரீ நா.ஞானசம்பந்தக் குருக்கள் இக்கும்பாபிஷேக கிரியைகளைச் செய்யவுளார். (எ-238)

# இலண்டன் அமைப்பினர் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி ஸ்ரீ கணேசா முன் பள்ளி நிலையத்திற்கு இலண்டனில் உள்ள நீர்வேலி நலன் புரி அமைப்பினர் 37 ஆயிரம் ரூபா பெறுமதியான கதிரைகள், மேசைகள், கரும்பலகைகள், ஆசிரியர்கள் கற்பிக்கும் மேசை போன்றவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர்.

மேற்படி முன்பள்ளிநிலைய அபிவிருத்தி குறித்து பல தரப்பினரிடமும் முறையிட்டும் கூட இதுவரையில் பலன் ஏற்படாததை அடுத்தே மேற்படி இலண்டன் நலன்புரி அமைப்பினர் இவ் உதவியை வழங்கி உள்ளனர்.

இலண்டன் அமைப்பினரின் இம் முன்மாதிரி குறித்து பலரும் பாராட்டு தெரிவித்துள்ளனர். (க)

## சனசமூக நிலையம் திறப்பு

(மானிப்பாய்)

புனரமைப்புச்செய்யப்பட்ட ஆனைக்கோட்டை மகாஜன சனசமூக நிலையம் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஒருதொகைநிதியினை முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-120)

# கொடுப்பனவு இல்லை

(யாழ்ப்பாணம்)

கஷ்டப் பிரதேச பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் பலருக்கு கஷ்டப் பிரதேச கொடுப்பனவு இதுவரையில் வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட ஆசிரியர் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப் படுகிறது.

இது சம்பந்தமாக எழுத்து மூலமாக சம்பந்தப்பட்ட திணைக்களத்திற்கு அறிவித்தும்கூட நடவடிக்கை எதுவும் இதுவரையில் மேற்கொள்ளப் படவில்லையென தெரிவிக்கப் படுகிறது. (க)

# அன்று கடவுளைக் காட்டுவாயா என்று கேட்டு குருவினால் தெளிவுற்றசுவாமி விவேகானந்தர்

சுவாமி விவேகானந்தரின் 140 வது ஜனன தினம் பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ணாசாரதா சேவாச்சிரமத்தில் அனுஷ்டிக்கப்படுவதை யொட்டிய கட்டுரை.

வசந்தா மணாளன்

1893 ஆம்ஆண்டுசெப்ரெம்பர்மாதத்தில் அமெரிக்காவில் நடந்த உலகசர்வமத மகாநாட்டில் உரை நிகழ்த்தி உலகப் புகழ் பெற்றவர் சுவாமி விவேகானந்தர். ஆங்கிலேயர்களின் மரபுக்குமாறாக அன்பார்ந்த சகோதர சகோதரிகளே என்று விழித்துப் பேசி மக்களின் உள்ளங்களைக் கவர்ந்து தன்பால் ஈர்த்துக் கொண்டவர் அவர். இந் நிகழ்வின் பின்னர் மேலைநாட்டவர்கள் பலர் அவரைப்பின் பற்றினார்கள். 1897 ஆம் ஆண்டில் தான்அவர் இந்தியாவுக்குத் திரும்பினார். பல இடங்களுக்கும் சென்று ஆன்மீகச் சொற்பொழிவாற்றி விட்டுஅவர் தாயகம்திரும்பும் போது தென்னிந்தியாவிலுள்ள பாம்பன்துறையில் கப்பலில்வந்திறங்கினார். அவரை வரவேற்பதற்காகஏற்கனவே, இராமநாதபுரம் அரசர் பாஸ்கர சேதுபதி தனது பரிவாரங்களுடன் ஆவலோடுஅங்குகாத்திருந்தார். கப்பலில்கரைக்கு வந்ததும் சுவாமிகள் தம்முடைய காலடியை இந்திய மண்ணில் வைக்க ஆயத்தமானார். அப்போது மன்னர் 'முன்னதாக அந்தப் பாதங்களை என் தலைமீது வையுங்கள்' என்று சுவாமியைக்கேட்டுக் கொண்டார். இந்தவார்த்தைகளை கேட்டசுவாமிகள் மெய்சிலிர்த்து அந்தமன்னர் சேதுபதியைக் கட்டித் தழுவிக் கண்ணீர் பெருக்கினார்.

### அலங்கார பவனியில் அரசர்

பின்னர் மன்னர் சேதுபதி விவேகானந்தரை இராமேஸ்வரத்துக்குஅழைத்துச் சென்று அலங்கார வண்டியில்உட்கார வைத்து வண்டியைத் தன் கையாலேயே இழுத்து இராமேஸ்வரம் வீதிகளில் சுற்றி வந்தார். இந்துமதத்தின் ஆத்மீகக்கொள்கைகளுக்குஎன்றே இந்த மரியாதையை மன்னர் செய்தார். இளைஞனாகவிருந்த போது நாத்திகம் பேசியவராய் விளங்கியசுவாமி விவேகானந்தர் இராமகிருஷ்ண பரமஹம்சரை அடைந்து பெற்றஞானத்தால் உண்மையை உணர்ந்தவரானார். இறைவனைக் காட்டுவாயா என்றுகேட்டுதிருவருள் ஞானம் பெற்ற இவர் இராம கிருஷ்ணரின் திவ்விய போதனைகள் உலகெங்கும் பரவும் வகை செய்தார்.

### கடவுள் பற்றிய விளக்கம்

இரவு நேரத்தில் ஆகாயத்தில்நட்சத்திரங்கள்பலவற்றை நீகாண்கின்றாய். ஆனால் சூரியன்உதிக்கும்பொழுது நீஅவற்றைக் காண்பதில்லை. ஆகையினால் பகற் பொழுதில் வானத்தில் நட்சத்திரங்களே இல்லையென நீ சொல்லிவிடலாகுமா? மானிடா; உன்னிடம் அஞ்ஞானம் இருக்கின்ற நாளிலேநீ இறைவனைக்காண முடியாத காரணத்தால்இறைவனே இல்லையென்று பகராதே இறைவனுடைய திருநாமங்கள் பலவாகும். அவரை அணுகுவதற்கு வழிதரும் ரூபங்கள் ஆனந்தமானவை. அவரை எந்த நாமம்கொண்டு எத்த ரூபம் கொண்டு வழிபட்டாலும் அதன்மூலம்நீஅவரை அறிந்துணருவாய், சத்பொருள் ஒன்றேயாம், யாண்டும் இருப்பதேயாம், இருக்கும் பேதமெல்லாம் நாமரூப பேதமேயாகும். ஏரியொன்றிலே மூன்று நான்குகட்டடங்கள் உள்ளன. ஓரிடத்தில் நீர் பருகும் ஹிந்துக்கள் அதை ஜலம் என்று குறிக்கின்றனர். வேறு இடத்தில் நீர்பருகும் முஸல்மான்கள் பாணி எனறு அதனைக் குறிக்கின்றனர். மூன்றாவது இடத்தில் நீர்பருகும் இங்கிலிஸ்காரர் அதை 'வாட்டர்' என்று குறிக்கின்றனர். மூன்று சொற்களும்ஒரேயொரு பொருளையே தான் குறிக்கின்றன. உள்ளபேதமெல்லாம் பெயரளவில் மட்டுமே தான். அதேபோன்று சத்பொருளை ஒருசிலர் 'அல்லா' என அழைக்கின்றனர். வேறு சிலர் 'கோட்' (GOd) என்ற இங்கிலிஸ் சொல்லால் அழைக்கின்றனர். அவ்வாறே சிலர் பிரமம் என்றும் சிலர் 'காளி' என்றும் மற்றவர்கள் இராமர், ஹரி, துர்க்கைஎன்பன போன்ற பெயர்களாலும் அழைக்கின்றனர்கடவுள். இது தான் இதைத் தவிரவேறு யாது மில்லை என்றுமுடிவாக யாரும் கூறி விடமுடியாது.

### உருவமும் அருவமும்

அவர் ரூபமற்றவர்தான், ஆனால் ரூபங்களும் கொண்டவர் ஆவார். பக்தர் பொருட்டு அவர் ரூபங்களை ஏற்கிறார்., ஆனால் ஞானியர்க்கோ அவர் ரூபமற்றவராக இருக்கின்றார். இது எவ்வாறு நிகழ்கின்றது என்பதை நீ அறிவாயா? சச்சிதானந்தப் பொருளாகின்றபிரம்மம் கரைகாணாத சமுத்திரம் போன்றது. தீவிரமான குளிர் காரணமாக சமுத்திரத்திலே இங்குமங்குமாகப் பார்வைக்கு புலனாகும் பனிக்கட்டிகள் உருவாகின்றன. அது போன்று தன்னை ஆராதிப்பவர்களுக்கு அகண்ட வஸ்துவானது தன்னை எல்லைக்குட்பட்ட பொருளாக மாற்றியமைத்துக் கொண்டு வழிபடும் பக்தர் முன்னே உருவக் கடவுளாகக் காட்சி தருகின்றது. அதாவது ஒரு சரீரியான புருஷனாக இறைவன் தம்மைத் தம் பக்தருக்குத் தோற்றுவித்துக் கொள்கின்றார். மேலும் சூரியன் உதித்தெழுந்தவுடன் சமுத்திரத்தில் உள்ள பனியானது உருகி நீர் ஆகிவிடுவது போன்று, ஞானம் உதித்தெழுந்தவுடன் சரீரியான இறைவன் மீண்டும் அகண்டமான அருவியான பிரம்மமாக உருவாகிப் போய் விடுகின்றார். அப்பொழுது கடவுள் ஒரு சரீரியான புருஷன்என்றஉணர்ச்சி மேலும் தொடர்ந்து இருப்பதில்லை. கடவுளுடைய ரூபங்களையும், அதன் பின்னர் காண்பதில்லை. ஆனால் இதனைக் கருத்திற் கொள்ள வேண்டும். ரூபமும், அரூபமும் ஒரே சத்பொருளையே சேர்ந்தனவாகும்.

கடவுளின் அருவ உருவ வழிபாடு பற்றிய இராமகிருஷ்ணரின் மேற் கூறிய கொள்கை விளக்கங்களை உலகிற்குணர்த்திச் சர்வமத சமரசம் காணச் சுவாமி விவேகானந்தர் முனைப்போடு செயலாற்றினார். அவரின் போதனைகள் நமக்கு வழிகாட்டும்.

# முஸ்லிம்களின் நிலைதொடர்பாக நோர்வே தூதருடன் பேச்சு

(கொழும்பு)

இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஜோன்வெஸ்பேர்க்கை, கப்பற்றுறை, கிழக்கு அபிவிருத்தி துறைமுக அபிவிருத்தி, முஸ்லிம் விவகார அமைச்சர் ரவூப் ஹக்கீம் சந்தித்து தற்போதைய நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளார்.

நேற்று இரவு 7 மணியளவில் நோர்வேத்தூதரகத்தில் இடம் பெற்ற இச் சந்திப்பின் போது,

தற்போது நோர்வே அனுசரணையுடன் இடம்பெறும் சமாதான முயற்சிகளில் முஸ்லிம் பிரதிநிதிகளும் பிரதான பங்கு வகிக்க வேண்டிய தன் அவசியம் குறித்து ஹக்கீம் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

தவிர, யுத்த நிறுத்தம் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கும் இவ்வேளையிலும் வடக்கு கிழக்கில் முஸ்லிம் மக்களிடம் பெருந்தொகைப் பணத்தை விடுதலைப்புலிகள் இயக்கம் வரியாக அறவிட்டு வருவதாகவும்,

ஆட்கடத்தல் மற்றும் இயக்கத்திற்கு ஆட்சேர்த்தல் ஆகிய நடவடிக்கைகளில் அவர்கள் தொடர்ந்தும் ஈடுபட்டு வருவதாகவும்,

சமாதன முயற்சிகளைப் பாதிக்கும் இவ்வாறான நடவடிக்கைகள் குறித்து பாதிக்கப்படும் பொதுமக்கள் சார்பாக தனக்கு அடிக்கடி சுட்டிக்காட்டப்படுவதாகவும் நோர்வேத் தூதரிடம் ஹக்கீம் எடுத்துக் கூறினார்.

சுமார் அரை மணி நேரம் இடம்பெற்ற இச் சந்திப்பின் முடிவில், இவ் விடயங்கள் தொடர்பாக தான் புலிகளின் கவனத்திற்கு கொண்டு வர விருப்பதாக நோர்வேத் தூதுவர், ஹக்கீமுக்கு உறுதிமொழி வழங்கியிருப்பதாகவும் கூறப்படுகின்றது. (உ)

## மணவாளக்கோல விழா

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் கருணாகரப் பிள்ளையார் கோயில் மணவாளக்கோல விழா இன்று காலை 9மணியளவில் மஹா கும்பாபிஷேகதின சங்காபிஷேகத்துடன்(1008சங்குகள்) ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இவ்விழாவை அடுத்து பிற்பகல் நடைபெறவுள்ளவிசேட பூசை வழிபாடுகளுடன் சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை விநாயகர் வழிபாடுபற்றிய சொற்பொழிவும், அளவையூர் சங்கீதபூஷணம் வீ. கே. நடராசாவின் இன்னிசைக் கச்சேரியும்இடம் பெறவுள்ளது. (வ)

# 30 பெண்களுக்கு கொழும்பில் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

பனம் பொருள் கைப்பணி உற்பத்தி தொடர்பான பயிற்சிகளைப் பெறுவதற்கென யாழ். குடாநாட்டில் இருந்து 30 பெண்கள் விரைவில் கொழும்பு செல்லவுள்ளனர்.

அங்கு பயிற்சி பெற்றுத் திரும்பும் மேற்படி 30 பேரும் தலா 15 பேருக்கு என்ற ரீதியில் இங்கு பயிற்சிகளை வழங்கவுள்ளனர்.

மகளிர் மட்டத்தில் கைப்பணித் திறனை விருத்தி செய்யும் நோக்கில் இத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாக பனைவள அபிவிருத்திச் சபைத் தலைவர் பொ. சிவபாதம் தெரிவித்தார். (உ-19)

# உலக இஸ்லாமிய இலக்கிய மாநாடு இலங்கையில்

(கொழும்பு)

உலக இஸ்லாமிய இலக்கிய மாநாடு, இவ்வருடம் ஒக்ரோபர் மாதத்தில் இலங்கையில் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 3 தினங்கள் இடம்பெறவுள்ள இம் மாநாட்டில் மூத்த முஸ்லிம் படைப்பாளிகள் கௌரவிக்கப்படவுள்ளதாக முஸ்லிம் விவகார அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார். (உ)

# பிறநாட்டு வேலை வாய்ப்பு விதிகளில் மாற்றம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்குமாகாணங்களைச் சேர்ந்த சுமார் 3இலட்சம் பேர்களுக்கு வெளி நாடுகளில் வேலைவாய்ப்புப் பெறும் வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டுள்ளது.

இதனைச் சீர் செய்யும் வகையில் வெளிநாட்டுவேலை வாய்ப்புத் தொடர்பான விதிகளில் தளர்வுகளை ஏற்படுத்துவதற்குவெளிநாட்டுவேலை வாய்ப்பு பணியகத்தின் புதிய தலைவர் சுசந்தா பெர்னாண்டோ நடவடிக்கை எடுத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது' (உ)

## இன்று ஒரு தகவல்

### நம்பிக்கை வேண்டும்

ஓர் ஊரில் மிக இனிமையாகப் பாடக்கூடிய குருடன் ஒருவன் இருந்தான். அவன் யாரையும்எப்பொழுதும்நம்ப மாட்டான், அதே ஊரில் பொற்கொல்லன் ஒருவன் இருந்தான், இருவரும் நண்பர்களாக இருந்தனர், குருடனைச் சந்தித்த பொற்கொல்லன், 'இந்த ஊரில் நம் இருவருக்குமே பிழைப்பதற்கு வாய்ப்பில்லை. அடுத்த நாட்டுக்குச் சென்றால் நம்திறமையைக் காட்டி நன்றாக வாழலாம் ,என்றான்,நீசொல்வது சரிதான் நாம் இருவரும் அடுத்த வாரம் புறப்படுவோம், என்றான் குருடன்.

குறிப்பிட்ட நாளில் இருவரும் தனித்தனிக் குதிரைகளில் அமர்ந்து புறப்பட்டனர், முதல் நாள மாலைநேரம், பயணம் செய்த களைப்பால் இருவருமே ஒரு பெரிய ஆல மரத்தடியில் தங்கினார்கள், பொழுது விடிந்தது. தன் குதிரைச் சவுக்கைத் தேடிய குருடனின் கைகளில் வழவழப்பான பொருள் தட்டுப்பட்டது, ஆ! என்ன அருமையான குதிரைச் சவுக்கு, இங்கே தங்கிய யாரோ இதனை மறந்து விட்டுச்சென்றிருக்கவேண்டும், என் நல்ல காலம் இது என் கைகளில் கிடைத்தது. பொற்கொல்லன் என்னை ஏமாற்றி இதைப் பிடுங்காமல் பார்த்துக் கொள்வேன் 'என்று நினைத்தான் அவன்.

விழித்த பொற்கொல்லன் தன் நண்பன் கையில் பாம்பைப் பிடித்திருப்பதைப் பார்ந்துத் திடுக்கிட்டான், 'கையில் பிடித்திருப்பதை எறிந்து விடு, அது பாம்பு என்று கத்தினான் அவன், 'நாம் பயணம் மேற்கொள்வோம், என் கையில் உள்ளதைப் பற்றிப் பேசாதே, என் உயிர் போனாலும் நான் அதைத் தூக்கி எறிய மாட்டேன்' என்றான் குருடன், இருவரும் குதிரையில் அமர்ந்தனர். தன் குதிரையை விரட்டக் கருதிய குருடன் கையிலிருந்தசவுக்கால் அதை ஓங்கி அடித்தான், வலி பொறுக்க முடியாது பாம்பு அவனைக் கடித்தது, அவன் அங்கேயே இறந்து விழுந்தான், அங்கு வந்தவர்களிடமெல்லாம் பொற்கொல்லன் 'இவன் என் பேச்சை நம்பாததால் இறந்துவிட்டான்,, என்று நடந்ததைச் சொல்லி அழுதான்.

பேராசிரியர் எ. சோதி

# பொங்கு தமிழின் இன்னொருகூறு

# 'தமிழ் எங்கள் உயிர்' எழுச்சி விழா

## மன்னார் நிகழ்விற்கு ஆயர் ஆசி

(மன்னார்)

உலக மொழிகளிலே தமிழ் மொழி தன்னகத்தேபலதனித் தன்மைகளைக் கொண்டிருப்பதை பல பேரறிஞர்கள் புகழ்ந்துகூறியதோடு அதனை எண்பித்தும் உள்ளார்கள். உலக மொழிகளுள் தொன்மை வாய்ந்த மொழி என்றும், பத்தியின் மொழி என்றும் பலராலும் புகழ்ந்து பேசப்படும் நம்தமிழ் மொழி ஐம்பெரும் காப்பியங்களால் அணிசெய்யப்பட்டுள்ள தனி மொழியாகும். எம் மொழிக்கும் இல்லாதஇச் சிறப்புக்கள் தமிழ் மொழிக்கு உண்டு. இத்துணை பெருமை வாய்ந்த தமிழ்த்தாயின் செல்வப் புதல்வர்களாகிய நாம் பெருமைப்பட வேண்டியவர்களே!

இத்தமிழ்த்தாயை வணங்கி தமிழ் எழுச்சி விழாக்கள் பல்வேறு இடங்களில் காலத்திற்கு காலம் நடைபெற்று வருகின்றன. கல்தோன்றி மண் தோன்றா காலத்து மூத்த எம் தமிழ் மொழியை ஆராய்ந்து அறியவும், வளர்த்து மிளிரச் செய்யவும் பல அறிஞர்கள் தம்மை ஈடுபடுத்தி உள்ளனர். இந்த வகையில் மொழி வளர்ச்சிக்கு கத்தோலிக்கரின் பங்களிப்பும் முழுமையாக இருந்து வருவதையும் நான் இவ் வேளையில் நினைவு கூருகின்றேன்.

ஈ. பி. ஆர். எல். எவ். சுரேஸ் அணியின் ஆதரவுடன் மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்று வரும் 'தமிழ் எங்கள் உயிர்' எழுச்சி வாரத்தையொட்டி மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட் திரு இராயப்பு ஜோசப்பு விடுத்துள்ள ஆசிச் செய்தியில் இவ்வாறு குறிப்பிடப் பட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது, 'இறைவன் என்னைநன்றாகப் படைத்தனன், தன்னை நன்றாக தமிழ் செய்யுமாறே' நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்என்னும்யதார்த்தங்களை எல்லாம்தனதுஇலட்சிய மூச்சாக்கி தமிழுக்கு தொண்டு செய்துதமிழ் வளர்த்தவர் தமிழ் தூதுதவத் திரு தனிநாயகம் அடிகள். தமிழ்மொழியின்மீதுபெருங் காதல் கொண்டுதமிழ்நூலகத்தை உருவாக்க பாடுபட்டு பல்மொழி தேறி தமிழ்வளர்த்தவர் தவத் திரு தாவிது அடிகள்.

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் தமிழ் சொற் பிறப்பு அகராதி செய்து தமிழ் தாய்க்குப் பணிசெய்தவர். இன்னும் இன்றும் பல திருமறையினர் தமிழ்த்தாய்க்கு திருத்தொண்டாற்றி வருகின்றனர்.

பொங்கு தமிழ் எழுச்சி விழாக்களின் இன்னொரு கூறாக தமிழ் எங்கள் தாய் எனப்பேணும்எழுச்சி விழா சரித்திர பெருமை வாய்ந்த முத்தறிப்புத்துறையிலேநடைபெறுவது மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். தமிழ்எழுச்சிவிழா சிறப்பாக நடைபெறவும், இதன் மூலம் தமிழ் எம்மில் மேலும் வளரவும் தமிழ்த் தாயை வாழ்த்திட இப் பணியில் ஈடுபட்டுள்ள அனைவரையும் பாராட்டுகின்றேன் இறையாசி வேண்டி நிற்கின்றேன். என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## இராசி பலன்

4-2-2002
(தை 22, திங்கள்)
சப்தமி பி.ப 1.53 வரை
சுவாதி மு.இ 9.42 வரை
ராகுகாலம் 8.05- 9.35
நல்லநேரம் 12.35- 2.05
அமிர்தம்.

**மேடம்**
முயற்சி நிறைவேறும், திடீர்பயணம், நண்பர்கள் சந்திப்பு, குடும்ப சுகம்.

**இடபம்**
சத்துரு ஜெயம், புதியமாற்றம், செய் தொழில் விருத்தி, வசிகரம்.

**மிதுனம்**
தாழ்ந்த சுபாவம், முயற்சி தாமதம், பதட்டம், அபகீர்த்தி.

**கடகம்**
கல்விச் சிறப்பு, விரும்பாத உறவு, அலைச்சல், காரிய தாமதம்.

**சிங்கம்**
இனியசம்பவம், தனவரவு, காரிய நன்மை; வாக்குப் பலிதம்.

**கன்னி**
வீண்செலவு, முயற்சி தாமதம், கௌரவக் குறைவு, தொழில் கஷ்டம்.

**துலாம்**
நல்லமுயற்சி, அமைதியான நிலை, போசன சுகம், செல்வாக்கு.

**விருச்சிகம்**
சயனசுகக் குறைவு, பிதா வழி உறவு, முயற்சிதாமதம், சகோதரர் உதவி.

**தனுசு**
காரியம்கைகூடும், பொருள் சேர்க்கை, தொழில் சிந்தை, சுவாரஸ்யம்.

**மகரம்**
அதிகாரம், சுபநிகழ்வு, உற்சாகம், தொழில் முன்னேற்றம்.

**கும்பம்**
கட்டுப்பாடு, காரிய தாமதம், உறவினர் சந்திப்பு, தொழில் சிந்தை.

**மீனம்**
காரிய தாமதம், உடல் சோர்வு, வீண்தொல்லை, பிரயாணக் கஷ்டம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

# தனித்துநின்று தம் உரிமைகளை வென்றெடுக்க முஸ்லிம் மக்கள் ஒன்றுபடுவது அவசியம்

## பேராளர் மாநாட்டில் அமைச்சர் ஹக்கீம் அறைகூவல்

(கொழும்பு)

முஸ்லிம் மக்கள் தனித்து நின்று தமது உரிமைகளை வென்றெடுக்கும் வகையில் ஒன்றுசேர வேண்டும்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற முஸ்லிம் காங்கிரஸின் கொழும்பு மாவட்டப் பேராளர் மாநாட்டில்கலந்து கொண்ட கப்பல்துறை கிழக்கு அபிவிருத்தி துறைமுக அபிவிருத்தி முஸ்லிம் விவகார அமைச்சர் ரவூப் ஹக்கீம் இவ்வாறு அறை கூவல் விடுத்தார்.

ஐ. தே. கட்சியின் பிரதித் தலைவரும் அமைச்சருமான கரு ஜெயசூரிய உட்பட மற்றும் பலர் கலந்துகொண்ட இம் மாநாட்டில் தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில்,

பேச்சுவார்த்தைக்கான சூழல் கனிந்து வரும் இவ் வேளையில், தமிழ்க்கட்சிகள் ஒன்றிணைந்து தமது உரிமைகளை நிலைநாட்டப் பாடுபடுவதுபோன்று முஸ்லிம்கள் அனைவரும் ஒன்றுபட்டுக் குரல் கொடுக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் முஸ்லிம்களாகிய நாம் ஒன்றுபடத் தவறுவோமாயின் பாதிக்கப்படுவது தவிர்க்க முடியாதது.

ஐக்கிய தேசியக்கட்சியுடன் இரண்டறக் கலந்து விட்டதாக கூறுவது தவறு.

அக் கட்சியுடன் சிநேக பூர்வமான பேச்சுவார்த்தைகளை நடத்தி எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்துள்ளோம் என்று குறிப்பிட்டார். (உ)

## நீதிபதியின் தலையீட்டையடுத்து,

# யாழ். சிறைக் கைதிகள் 17 பேரின் உண்ணா விரதம் ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட நீதிபதி இ.த. விக்னராஜா கொடுத்த வாக்குறுதியின் அடிப்படையில் யாழ் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்து வந்த சிறைக்கைதிகள் தமது உண்ணாவிரதத்தை 10 தினங்களுக்கு ஒத்திவைக்க இணக்கம் தெரிவித்துள்ளனர்.

பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின் கீழ் யாழ். சிறைச் சாலையில் தடுத்து வைக்கப் பட்டுள்ள 22பேரில் 17 கைதிகள் தம்மீதான விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறும் இல்லையேல் விடுதலை செய்யப்பட வேண்டும் என்றும் கோரி கடந்த வெள்ளிமுதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றமை தெரிந்ததே.

இவர்களில் ஒருவர் கடந்த சனியன்று இரவு மயக்கமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருப்பதாகவும்.

மூவர் சிறைச்சாலையின் கூரை மீது ஏறி உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருவதாகவும் யாழ். சிறைச்சாலை அதிகாரி நேற்றைய தினம் காலை யாழ். மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜாவுக்கு அறிவித்திருந்தார்.

அதன் பேரில் மு.ப 10.30 மணியளவில் அங்கு சென்ற நீதிபதி கூரையில் ஏறி உண்ணா விரதமிருந்த கைதிகள் உட்பட அனைத்து உண்ணா விரதிகளுடனும் கலந்து பேசி அவர்கள தரப்பு நியாயங்களைக் கேட்டறிந்து கொண்டதுடன்,

இது விடயம் தொடர்பாக உடனடியாக சட்டமா அதிபர் மற்றும் பிரதம நீதியரசர்ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வந்து தக்க நடவடிக்கை யெடுப்பதெனஉறுதியளித்ததன் பேரில் 10 நாள் அவகாசத்துடன் கைதிகள் தமது உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர். (உ)

## தலைவர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இதுவரை காலமும் தெங்கு வளஅபிவிருத்திச் சபையுடன் இணைந்து அதன் சட்ட விதிகளுக்கு அமைய செயற்பட்டு வந்த பனை அபிவிருத்திச் சபையானது விரைவில் தனியான சபையாக செயற்படவுள்ளதாக அச்சபையின் தலைவர் பொ. சிவபாதம் தெரிவித்துள்ளார். (க-19)

இலங்கையின் சுதந்திர தினத்தை

# இன்று இந்தியாவிலும் கொண்டாட ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கை மகாபோதி சங்கம், டெக் ஸ்ரீலங்கா நிறுவனத்துடன் இணைந்துமுதன் முறையாக இலங்கையின் சுதந்திர தினத்தை இந்தியாவின் தமிழ் நாட்டில் கோலாகலமாக கொண்டாட ஏற்பாடு செய்துள்ளது.

இன்று மாலை 6 மணிக்கு சென்னை எக்மோர் தலைமையகத்தில் இடம்பெறவுள்ள இச் சுதந்திர தின நிகழ்வில் கர்நாடக முன்னாள் ஆளுநரும் முன்னாள் நீதியரசருமான கே.மோகன் விசேட உரையாற்றவுள்ளதுடன்,

கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் பேராசிரியர் கலாநிதி ஜே. பி. திஸநாயக்க மொழியின் மகிமை என்ற பொருளில் உரையாற்றவுள்ளார். (உ)

## சிந்தனைக்கு விருந்து

**கண்ணன் காலைப் பிடிப்போம்**

அய்வர்க்குத் தேவி அவையில் அவமானம்
செய்யப் படுங்கால் திருமார்பன் - செய்யருளால்
சேலை வளர்ந்ததாம் சிக்கென் றவனுடைய
காலைப் பிடிப்போம் கதி.

'பழையவன்'

திருமார்பன் - கண்ணபிரான்.

# பின்லேடனுடன் தொடர்புடையவீடு அமெரிக்காவில் கண்டுபிடிப்பு

## புலனாய்வுப் பொலிஸார் தகவல்

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் பின்லேடனுடன் நெருங்கிய தொடர்புடைய வீடொன்றை அமெரிக்க புலனாய்வுப்பொலிஸார் கண்டுபிடித்துள்ளதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் மிக முக்கிய மாநிலமொன்றில் ஆள் நடமாட்டம் இல்லாத பகுதியில் சந்தேகத்திற்கு இடமான கட்டிடம் ஒன்று உள்ளதாகவும, திடீரென அதனை முற்றுகையிட்ட அதிரடிப் புலனாய்வு பொலிஸார் அதனை தீவிரமாக சோதனை இட்டபோது பின்லேடனின் படங்கள், கையேடுகள், மற்றும் அல்கைதா அமைப்பினர்களுக்கு பின்லேடன் அனுப்பி வைத்துள்ள ஒலி, ஒளிநாடாக்கள் மற்றும் ஆப்கானிஸ்தானின் முக்கிய சில இடங்களுடன் கூடிய முகவரிகள் கைப்பற்றப்பட்டன.

மேலும் அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா போன்ற பெரும் நாடுகளில் வாழும் முக்கிய புள்ளிகளின் முகவரிகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

இவற்றுடன் அமெரிக்காவின் முக்கிய கேந்திர நிலையங்களின் வரை படங்களும் அவை தாக்கப்பட வேண்டிய காலங்கள் இதற்கு உடந்தையாகவுள்ள அமெரிக்க அரசியல்வாதிகள் பலரின் தொலைபேசி இலக்கங்கள் அடங்கிய முக்கிய கோப்பு ஒன்றும் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்று அத்தகவல் தெரிவிக்கின்றன.

மேலும் நாட்டை பாதுகாப்பதற்காகவும்சூத்திரதாரிகளை ஆதாரங்களுடன் கைது செய்யவும் இது பற்றிய பூரண தகவலை வெளியிட புலனாய்வுப் பொலிஸார் தாமதித்து வரும் அதேவேளை இத்தகவலை ஊர்ஜிதம் செய்ய முடியாமல் உள்ளது என்று அமெரிக்க அரச தகவல்களை ஆதாரம் காட்டி செய்தி ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

(க-7)

# பாதுகாப்பு படையினர் மீது பழங்குடிமக்கள் தாக்குதல்

(புதுடில்லி)

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமாகிய மேகாலயாவில் டாட்டா என்ற கிராமத்திற்குஅருகில் அமைந்துள்ள எல்லையில் பாதுகாப்புக்கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மீது பழங் குடி அமைப்பினர் தாக்குதல்நடத்தியதில் 24 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இத்தாக்குதலில் ஆசிய தேசிய தன்னாதிக்கக்குழு, மற்றும் நாகலாந்து தேசிய சோசலிஸக் குடியரசு தீவிரவாதிகள்ஈடுபட்டதாகஇந்திய பொலிஸார் தெரிவித்தனர்.

நாகலாந்தில் இருந்துநாகலாந்து மக்களுக்குதனிநாடு கோரியும், மேகலாயாவில் இருந்து பழங்குடியினருக்கு தனிநாடு கோரியும் இந்த இருஅமைப்புக்களும்தாக்குதல் தொடுத்துள்ளன. (செ-7)

# அமெ.பத்திரிகையாளர் கொல்லப்பட்டிருக்கலாம் செய்திகள் ஊகம்

(இஸ்லாமபாத்)

பாகிஸ்தான் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டு பயணக்கைதியாக வைக்கப்பட்டுள்ள அமெரிக்கப் பத்திரிகையாளர் டானியல் பேர்ள் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

அமெரிக்க பத்திரிகையாளர் டானியல் பேர்ளை விடுவிப்பதற்காக பாகிஸ்தான் விதித்திருந்த நிபந்தனைகளுக்கு எதுவித பதிலும் கிடைக்காததையிட்டு அப் பத்திரிகையாளரை தீவிரவாதிகள் கொன்றிருக்கலாம் என்றும் பரவலாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதே வேளை, அமெரிக்க பத்திரிகையாளரை விடுவிப்பதாக இருந்தால் 2 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க வேண்டுமென்றும் அமெரிக்காவால் கைது செய்யப்பட்ட ஆப்கானிய நாட்டு பாகிஸ்தான் தூதுவர் முல்லா அப்துல் சலீமை விடுதலை செய்ய வேண்டும் என பாகிஸ்தானின் இஸ்லாமிய வாத குழு ஒன்று கேட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

(செ-7)

# உலக தரிசனம்

## மூன்று ஆண்டுகளின் முன்

# மதகுருவைக் கொலை செய்தவர் குற்றத்தை ஒப்புக் கொண்டார்

(புதுடில்லி)

கிழக்கிந்திய நகர் ஒன்றில் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் கொல்லப்பட்ட அவுஸ்திரேலிய மதத்தலைவர் ஹிறகாம் றெயினைக் கொன்றதாக குற்றம் சாட்டப்பட்ட 14 பேரில் ஒருவர் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார்.

மகிந்ரா என்ற இக் குற்றவாளி தனது குற்றத்தை ஒப்புக் கொண்டு புவனேஸ்வரில் உள்ள சிறப்பு நீதி மன்றம் ஒன்றிற்கு எழுத்து மூலம் வாக்கு மூலம் அளித்துள்ளார்.

இவர் தனது வாக்கு மூலத்தில் மேற்படி மதபோதகரும் அவரது மகன்மாரும் வாகனம் ஒன்றில் தூங்கிக் கொண்டிருந்த பொழுது, அவ் வாகனத்திற்குத் தீ வைத்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இக்கொலையுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் 14பேரில்மகிந்ரா என்ற இந் நபர் மட்டுமே குற்றத்தை ஒப்புக் கொண்டுள்ளார்.

எனினும் இவர்களில் எவரும் விடுதலை செய்யப்படாமல் தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (செ-7)

## ஜோர்ச் புஷ்ஷின் சீற்றம் தணிவு

(நியூஜோர்க்)

கடந்த சில தினங்களுக்கு முன் அமெரிக்க நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் ஈரான் ஈராக் நாடுகளை கடுமையாக தாக்கிப் பேசிய அதிபர் புஷ் இப்பொழுது அவர்கள் விடயத்தில் சற்று கணிந்தவராகக் காணப்படுகிறார்.

ஈரான், ஈராக், வடகொரியா ஆகிய நாடுகள் அமைதியை நிலைநாட்ட அமைதியான முறையில் செயற்படுமாயின் அமெரிக்கா அவற்றுடன் பேச்சுவார்த்தை நடத்த முடியுமென்று தற்போது அதிபர் புஷ் தெரிவித்திருக்கிறார்.

இதேவேளை அமெரிக்காவில் குற்றமிழைத்த வெளிநாட்டவர்களை இராணுவ நீதி மன்றில் விசாரிக்க புஷ் உத்தரவிட்டிருப்பதை மனித உரிமைகள் அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

(து)

# அரபாத்தை கொல்ல ஏரியல் ஷரோன் திட்டம்

(ஜெருசலேம்)

பலஸ்தீன அதிபர் யஷீர் அரபாத்தைப் படுகொலை செய்ய இஸ்ரேல் புதிய ஒரு குழுவை பலஸ்தீனத்தில் உருவாக்கி வருவதாக பலஸ்தீன செய்திகள் தெரிவிக்கின்றன.

பலஸ்தீன அதிபர் அரபாத்தையும் அவரது மெய்க்காவலர்களையும் கொலை செய்வதற்கு பலஸ்தீனத்தில் உள்ளவர்களையே இஸ்ரேலியப் பிரதமர் பயன்படுத்தப்போவதாகவும் அதற்கான பயிற்சிகளை பயிற்றுவித்து வருவதாகவும் அச்செய்தி மேலும் தெரிவித்துள்ளது. (செ-7)

## பலஸ்தீனத்தில்

# இரு இயக்கங்களுக்கு இடையில் முறுகல் நிலை

(ஜெருசலேம்)

பலஸ்தீனதலைவர் யஷீர்அரபாத்தின் பலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும் பலஸ்தீன விடுதலை முன்னணிக்கும் இடையில் முறுகல்நிலை ஏற்பட்டுள்ளது.

பலஸ்தீன விடுதலை முன்னணியின் தலைவர் முஹமட்ஸதார் பலஸ்தீன விடுதலை இயக்கத்தினால் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்தே இந்த முறுகல்நிலை எழுந்துள்ளது

இஸ்ரேலின் நெருக்குதலின் காரணமாக கைதுசெய்யப்பட்ட பலஸ்தீன விடுதலை முன்னணியின் தலைவர் முஹமட்ஸதார் கைதுசெய்யப்பட்டாலும் பலஸ்தீன விடுதலைக்காக நாம் ஒவ்வொருவரும் இறுதிவரை போராடி வருவோம் என்றும் அவ்வமைப்பு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(செ-7)

# இஸ்லாமிய கெரில்லாக்களின் தாக்குதல் சம்பவங்களில் 17 பேர் உயிரிழப்பு

(அல்ஜீரியஸ்)

அல்ஜீரியாவில் இஸ்லாமிய கெரிலாக்கள் நடத்திய இரு வெவ்வேறு தாக்குதலின் போது 17 பேர் கொல்லப்பட்டதுடன் 20 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

தலை நகரில் இருந்து 75 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள நீடியா என்னும் இடத்தில் இடம் பெற்ற முதலாவது தாக்குதல் சம்பவத்தில் 15 பேர் கொல்லப்பட்டதுடன் 9 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மேலும் தலை நகருக்கு 50 கிலோ மீற்றர் வடக்கேஉள்ள பிரிடா எனும் இடத்தில் இடம் பெற்ற இன்னுமொரு மோதலில் 2 பேர் பலியாகியுள்ளனர் பலர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இதைவிட அல்ஜீரியாவில் 1992 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் ரத்துச் செய்யப்பட்டதில் இருந்து ஒருலட்சத்திற்கும் அதிகமானவர்கள் பலியாகியுள்ளமையும் குறிப்பிடத் தக்கது. (செ-7)

## பகவான்ஸ்ரீசத்தியசாயிபாபா

# சேவை நிறுவனங்களின் செயல்கள் போற்றத்தக்கன

(தென்மராட்சி)

வடபிராந்தியத்தில இயங்குகின்ற பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா சேவை நிறுவனங்களின் செயற்பாடுகளும் சேவைகளும் மெச்சத்தக்கவைகளாக விளங்குகின்றன.

மேற்படி நிறுவனத்தின் மத்திய இணைப்பாளரான ஸ்ரீ. எம். வன்னியசேகரம் நேற்றையதினம் கோப்பாயில் நடைபெற்ற மனித மேம்பாட்டுக் கல்வி ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வட பிராந்திய தலைவர் ஸ்ரீ. ஆர் வசந்த சேனன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் ஆசிரியர் பயிற்சி நிலையத்தை ஆலோசகர் ஸ்ரீ எஸ். சிவஞானம் சம்பிரதாய பூர்வமாக நாடா வெட்டித் திறந்துவைத்தார். (உ-77)

# கடவுச்சீட்டில் முறைகேடு நானூறு பெண்கள் நீர்கொழும்பு சிறையில்

(கொழும்பு)

கடவுச்சீட்டு இன்றி அல்லது அது தொடர்பான முறைகேடுகளுக்காக நீர்கொழும்புச் சிறையில் 400 பெண்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் விடுவிக்கப்படுவதற்கு குற்றப்பணமாக ஒரு இலட்சம் ரூபா செலுத்தப்படவேண்டுமாகையால், இவ்வளவு பெருந்தொகையைச் செலுத்த வசதியின்றி தொடர்ந்தும் சிறையில் வாடுகின்றனர். (உ)

# கூட்டணியின்செயலாளர் மூதூருக்குப் பயணம்

(கொழும்பு)

புலிகளின் கட்டுப்பாட்டு மூதூர்பிரதேசத்திற்குதமிழர் விடுதலைக் கூட்டணியின் பொதுச் செயலாளரும் திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா சம்பந்தன் சென்றிருப்பதாக தெரியவருகிறது.

கடந்த சில தினங்களாக அங்கு தங்கி நிற்கும் இரா சம்பந்தன் உள்ளூராட்சித் தேர்தல் மற்றும் அதில் கூட்டமைப்பினர் போட்டியிடுவது குறித்து பொது மக்களினதும் விடுதலைப் புலிகளினதும் அபிப்பிராயங்களை கேட்டறிந்து வருவதாக கூறப்படுகிறது. (உ)

## உள்ளூராட்சி தேர்தலின் போது

# அரச உடமைகளை; கட்சிகள் பாவிக்க முடியாது

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலின் போதுஎந்தவொரு அரசியற் கட்சியும் அரசாங்க உடமைகளைப் பயன்படுத்துவதற்கு தேர்தல் ஆணையாளர் தடை விதித்துள்ளார்.

அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் சபைகள் ஆகியவற்றின் எந்தவொரு அசையும் அசையாச் சொத்துக்களையும் கட்சிகள் பயன் படுத்தக் கூடாது என தேர்தல் ஆணையாளர் விடுத்துள்ள அறிக்கைஒன்றில்குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் யாப்பின் பதினேழாவதுஅத்தியாயத்தின்பிரகாரமே இத் தடை உத்தரவு விதிக்கப்பட்டுள்ளதாக அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது. (செ)

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்

- குறள்

வலம்புரி

## சுதந்திர தாகம்

'என்று தணியும்இந்தச் சுதந்திர தாகம்' என்று மடியும் இந்த அடிமையின் மோகம் ? பாரதியின் பாடல் காதுகளில்மெல்ல ஒலிக்கிறது ஆங்கிலேயன் தமிழருக்கு வஞ்சகம் செய்து இன்று 54 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டது.

'என்று தணியும் இந்த சுதந்திர தாகம்' என்ற பாடல் அடிமைப்பட்ட 54 வருடங்களின் நிறைவில் காதுகளில் மெல்ல ஒலிப்பதற்கும் போராட்ட உணர்வு ஓர் காரணமாக இருக்கலாம். இலங்கையின் சுதந்திரத்தை சிங்களப் பேரினவாதத்தின் கைகளில் ஒப்படைத்த பிரித்தானியர் தமிழினம் குறித்து எதுவுமே சிந்திக்காததற்கு அன்றை தமிழ்த் தலைவர்களும் தேகாந்த நிலையில் குற்றவாளிகள் என்பது மறுக்க முடியாத உண்மை. 1948 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ந் திகதி இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தது என்று சிங்களத் தலைவர்கள் உரத்துக் குரல் கொடுக்கும் போது அதேதினத்தில் தமிழர்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டது என்பதைஒவ்வொருதமிழ் மகனும் உணர்வதும், உணர்த்துவம் மிக மிக அவசியமாகும்.

இலங்கை சுதந்திரம் அடைந்ததால் தமிழ் மக்களுக்கு கிடைத்த ஒரே சலுகை அன்றைய விடுமுறை தினமாகும். இதைத் தவிர தமிழ் மக்கள் எந்த உரிமையையும் அனுபவிக்கவில்லை.

இந்நிலையில் 54 வது சுதந்திரதினத்தை சிங்கள மக்கள் கொண்டாடும் போது யுத்தத்தின் சத்தங்கள் (மரியாதை வேட்டைத் தவிர) ஓய்ந்திருப்பது ஓரளவேனும் திருப்தியைத் தருவதாக உள்ளது. எனினும் ஓய்ந்திருக்கும் யுத்த நிறுத்தப் 2003 ம் ஆண்டின் 55 வது சுதந்திர தினத்தை தமிழ் மக்களும் இணைந்து கொண்டாட வழிவகுக்குமா என்பது கேள்விக்குரியது.

ஒரு நாட்டின் சுதந்திரம் என்பது அந்நாட்டின் பிரஜைகள் அனைவரினதும் உரிமைகள் சரியான முறையில் பேணப்படுவதை - பாதுகாக்கப்படுவதைக் குறிப்பதாகும். சிறுபான்மை இனங்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டிருக்குமாயின் அந்நாட்டின் சுதந்திரம் கொண்டாடப் படுவது எவ்வகையிலும் பொருத்தமற்றதாகும்.

# நம்மை நாமே மதிக்காது இருந்தோமெனில் உலகம் ஒருபோதும் உயர்வாக நோக்காது

டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி

மனிதனது பெரிய குறைபாடு தன்னைத்தானே அறிந்து கொள்ளாதது தான். நம்மை நாமே மதிக்காதது தான். நம்மிடம் நாமே அன்பு செலுத்தாதது தான். ஒரு சிறு தவறு நேர்ந்து விட்டால் அதற்காகப் பலர் ஏங்கிப் போகிறார்கள், ஒரு தவறு நேர்ந்து விட்டால் அதற்குத் தங்களைத் தாங்களே பலர் சவுக்கடி கொடுத்துக் கொள்கிறார்கள். அடிக்கடி அதையே எண்ணிப்பொருமுகிறார்கள். தாங்கள் ஏதோ வாழ லாயக்கில்லாதவர்களாகத் தங்களைப் பற்றித் தீர்ப்புக் கூறிவிடுகின்றனர். இதனால் நமக்கு நாமே தீமை செய்து கொள்கிறோம். உடல் அளவில் தீமை நேர்கிறது? உள்ள அளவில் விளையும் தீமை ஆயுள் பூராவும் நாவினால் சுட்டவடுவாய் நம்முடன் வாழ்கிறது. நமது நல்ல வாழ்வை நம் நினைவு கறையாய் நின்று பாதிக்கிறது.

### நம்மைநாம் மதிப்போம்

நம்மை நாம் மதிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும், நம்மை நாம் கண்ணியமாக நடத்தவும் நினைக்கவும் பழகிக் கொள்ள வேண்டும். நம்மை நாம் பெருமனிதனாக மதிப்புக் கொடுத்து நடத்தக் கற்றுக் கொள்ள வேண்டும். அப்போது தான் பிறர் நம்மை மதிப்பார்கள். நம்மை நாம் எப்படி மதிப்புப் போட்டு வைத்திருக்கிறோமோ, அப்படித்தான் உலகம் ஏற்றுக் கொள்கிறது.

அஞ்சி, கூனிக் குறுகி நிற்கும் ஆளை வேலைக்காரனாகத்தான் நடத்துவார்கள். மாமனார் வீட்டில்கூடபயந்து கொண்டு, ஆசிரியர் கேள்வி கேட்பாரோ என்று அஞ்சி, கடைசி பெஞ்சில் உட்காரும் மாணவர்களை 'என்னருமைக் கடை மாணாக்கர்களே' என்று தான் ஆசிரியர் கூப்பிடுவார் நடத்துவார். 'எனக்கு அதிகம் தெரியாது இதைப்பற்றி' என்று முன்னுரை கூறி விட்டுத் தன் கருத்தைச் சொல்பவனின் சொல்லுக்கு சபையோ பிறரோ அதிகம் மதிப்புத்தரமாட்டார்கள். 'நான் உடையைப் பற்றி லட்சியம் செய்வதில்லை' என்று கூறிக் கொண்டு நடந்து கொண்டால். நமது உடை எந்தவித உணர்வை பிறர் மனத்தில் எழுப்புமோ அந்த மரியாதையுடன் தான்உலகம் நம்மை நடத்தும். நாம் நம்மை எப்படி ஏற்றுக் கொள்கிறோமோ அப்படித்தான் உலகம் ஏற்றுக் கொள்ளும்.

### உலக மதிப்பு

பிறரைத் திருப்தி செய்வதற்காகவோ, பிறர் வலுக் கட்டாயம் செய்கிறார்கள் என்பதனாலோ ஒரு காரியத்தைச் செய்ய முயலும் ஒருவனை, அவனை எதையும் செய்யச் சொல்லலாம் என்று தான் உலகம் நம்பும். குழந்தைகள் வயதாகிய பின்னும், தாய் குழந்தைகளின் துணியைத் துவைத்துப் போட்டுக்கொண்டிருந்தால் 'ஏன் இன்று துணியைத் துவக்க வில்லை?' என்று கோபப்படுவார்களே தவிர 'அடட! அம்மா நமக்காகத் தினமும் துணி அல்லவா தோய்த்துத் தருகிறாள்' என்று நன்றி தெரிவிக்க மாட்டார்கள்.

ஆகவே தான் நாம் நம்மை எப்படி நடத்துகிறோம் என்பது மிக முக்கியமானது. நான் புத்திசாலி, திறமைசாலி என்ற நினைவுடன் ஒரு சந்தர்ப்பத்தில் நடந்து கொண்டு அதற்குக் கிடைக்கும் வரவேற்பையும் 'எனக்கு அதிகம் தெரியாது' என்ற சந்தேகம்-பயம் கலந்த நினைவுடன் ஒரு சந்தர்ப்பத்தில் நடந்துகொண்டு அதற்குக் கிடைக்கும் வரவேற்பையும் கற்பனை செய்து பாருங்கள்.

உண்மையில், நம்மில் பலர் நம்மையே தாழ்த்திக் கொண்டு வாழ்வது தெரிய வரும்.

உடலும் அப்படித்தான். உடல் ஆத்மா தங்கியிருக்கும் அற்புதமான கோயில், அதை எப்படி சரியாகக் கவனிக்காது உதாசீனம் செய்கிறோம், கண்டதை உள்ளே போட்டு அதைப் பாழ்படுத்துகிறோம் என்பது தெரிய வரும். வெகு சிலரே உடலின் மேன்மையை அறிந்து அதைக் கண்ணியத்துடனும் மரியாதையுடனும் நடத்துகின்றனர். சரிவரக் கண்காணிப்பு இல்லாத உடல் நாளடைவில் அதன் பலனைத் தோற்றுவிக்கிறது.

### ரமணரின் அங்கலாய்ப்பு

அந்திய காலத்தில் ரமணர் உடல் நோய்வாய்ப்பட்டார். ஊரிலுள்ள சந்தேக வாதிகள் அவர்தான் யோகியாயிற்றே, முனிவராயிற்றே எப்படி இதெல்லாம்- உடல்நோயெல்லாம் வரக் கூடும் என்று கேட்டார்கள். ரமணர் அவர்களுக்குப் பதில் சொல்லவில்லை. ஆனால் தன் உடலைப் பார்த்துக் கூறினார் நீ என்ன செய்வாய்? உன்னை இளவயதில் பசி என்றும் பட்டினி என்றும் எத்தனை சித்திரவதை செய்தேன்' என்று அங்கலாய்த்தார்.

எதைப் போற்றுகிறோமோ அது வளரும் எதைத் தூற்றுகிறோமோ. உதாசீனம் செய்கிறோமோ அதுதாழும். இது உலக உண்மை. அன்பு காட்டி வளர்க்கப்படும் குழந்தைக்கும், தாயின் அன்பும் பரிவும் இல்லாது வளரும் குழந்தைக்கும் அதன் ளர்ச்சியில் விளைந்த மகத்தான மாறுபாட்டை குறைபாட்டை. விஞ்ஞானிகள் பரீட்சித்திருக்கின்றனர்.

### உள்ளம் ஒரு சிறு சக்தி நிலையம்

அதே போலத்தான் உள்ளமும். உள்ளம் ஒரு சிறுசக்தி நிலையம். அதன் சக்தியை அதிகப்படுத்தலாம்; குறைக்கலாம். எல்லாம் நம் கையில் இருக்கிறது. நாம் உள்ளே போடும் எண்ணங்களின் தன்மையையும் பொறுத்து இருக்கிறது.

நான் சொல்ல விரும்புவது: பலர் பயம் சந்தேகம் என்னால் முடியாது. அவனைப் போல் நானில்லை என்ற பல எண்ணங்களால் உள்ளத்தைச் சின்னாபின்னப்படுத்தி வருகிறார்கள், சித்திரவதை செய்து வருகிறார்கள். இதன் விளைவாக உள்ளம் அந்த சந்தேகங்களில் ஊறி ஊறி அதை நம்பத் தொடங்குகின்றது. அதையே உண்மையாக்குகிறது. அவர்கள் போட்ட மதிப்பினால் அவர்களையே தாழ்த்தி விடுகிறது.

வாழ்வு என்பதுஏதோ வந்ததைப் பெற்றுக் கொள்வதல்ல. ஆற்றில் மிதக்கும் சிறுதுரும்பின் கதியல்ல வாழ்வு. வாழ்வு நீரோட்டமல்ல. அது ஓர் எதிர் நீச்சல் வாழ்வு ஒரு போராட்டம். வாழ்வு ஒருதுடிப்பு அடங்கி ஒடுங்கி அமிழ்ந்து போவதல்ல வாழ்வு.

### வாழ்வு போராட்டம்

வாழ்வு, சுய தேவைக்கான அடிப்படைப் போராட்டம். உண்மைக்கானபோராட்டம். அன்புக்கான போராட்டம். வாழ்வு செயலற்ற தன்மை அல்ல. ஆனால் நம்பிக்கை இழந்த மனிதன் செயலற்றுப் போகிறான். ஆகாயத்தைப் பார்க்கிறான். பிற மனிதர்களின் முகத்தைப் பார்க்கின்றான். இவர்களைப் பார்த்துத்தான் பாரதியார் 'நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால், அஞ்சி அஞ்சி சாவார் இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே' என்று.

உங்கள் உருவத்தைக் கற்பனை செய்து உங்கள் எதிரில் ஒரு கணம் அந்த உருவத்தை நிறுத்துங்கள். பின்சொல்லுங்கள் 'அந்த மனிதனை நான் அறிவேன், அவன் கண்ணியமிக்கவன், புத்திசாலி, திறமைசாலி, எடுத்த காரியத்தைச் சாதிக்காது விடமாட்டான், துடியான மனிதன், சளைக்காத மனிதன்' அப்படி ஒரு மனிதன் இருந்தால் நாம் அவனை மதிப்போமா, மாட்டோமா? ஏன் அத்தகைய ஓர் அறிவும் திறமையும் அன்பும் வலிமையும் கொண்ட மனிதனாக நம்மை நாம் மதிக்கக்கூடாது? உருவகப் படுத்தக் கூடாது?

### சர்க்கஸில் சிறுவன்

ஒரு சிறுவன் தன் வயோதிப தாத்தாவுடன் சர்க்கஸ் பார்க்கப் போனான். அங்கே ஒரு சின்ன மனிதன் ஒரு வளைந்த இரும்புக் கம்பியை வைத்துக்கொண்டு ஒருபெரிய யானையை தன் இஷ்டப்படி பல காரியங்களைச் செய்யச் சொல்லிக்கொண்டிருந்தான். இதைக்கண்ட சிறுவன் தாத்தாவைப் பார்த்துக் கேட்டான், 'எப்படித் தாத்தா அந்தச் சின்ன மனிதன் அந்தப் பெரிய யானையை அப்படிஆட்டுவிக்கிறான்?' என்று. தாத்தாசொன்னார்: 'பேரா! அந்த யானைக்குத் தன் முழு சக்தியின் வலிமையும் தெரிந்திருந்தால் இந்த ஊரையே நாசஞ் செய்திருக்கும்.

அதேபோலத்தான் நம்மை நாம் அறிந்து கொள்ளாமல் வாழ்கிறோம். நமக்குள்ளே வலிமை இருக்கிறது, சக்தி இருக்கிறது, எல்லாவற்றிற்கும் வேண்டிய எல்லாம் இருக்கிறது.

நன்றி- ஆனந்தவிகடன்

## தினசரி தியானம்

### உழைப்பு

காய நிலை அல்லவென்று
காண்பார் உறங்குவரோ?
தூய அருட் பற்றாத்
தொடர்வார் பராபரமே.

- தாயுமானவர்

உழைப்பே வடிவெடுத்துள்ள கோவே, என்வாழ்வு விழுப்ப முடைய தாவதற்கு நானும் உழைப்பே வடிவெடுத்திருப்பேனாக.

அண்டங்கள் அனைத்தையும் இயக்குதலில் இறைவனுக்கு ஓய்வு என்பதில்லை. அவனது பேருழைப்பால் புவனம் புனிதத்தைப் பெற்று வருகிறது. முறையுடன் உழைப்பவர் இறைவணக்கம் செய்கின்றனர். முறையுடன் உழைப்பவர் முன்னேற்றமடைகின்றனர். உழைக்கக் கற்றுக் கொள்பவர் வாழக்கற்றுக் கொள்பவர் ஆகின்றனர்.

ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்.

## கருஜயசூரியா தலைமையில் அமைச்சர் குழுவொன்று வெளிநாடு பயணம்

(கொழும்பு)

மின்சக்தி எரிசக்தி அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் உபதலைவருமான கருஜெயசூரிய தலைமையிலான பாராளுமன்றக் குழு எதிர்வரும் 11ம் திகதி வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணமொன்றை மேற்கொள்ளவுள்ளன.

இக்குழுவில் முஸ்லிம்மக்கள் சார்பாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் பிரதி அமைப்பாளரும், திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான அன்வர் இஸ்மாயிலும், தமிழ் மக்கள்சார்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் உபதலைவரும் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான வீ. ஆனந்தசங்கரி மற்றும் கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு ஆகியோரும் செல்லவுள்ளனர்.

இங்கிலாந்து, சுவீடன், அவுஸ்திரேலியா, ஆகிய நாடுகளுக்குச் செல்லும் இக்குழுவினர் அங்குநடைபெறும்முரண்பாடுகளைத் தீர்த்தல் எனும் கருத்தரங்கிலும்கலந்து கொள்வர்.

இக்குழுவினர் மீண்டும் எதிர்வரும் 17ம் திகதி நாடு திரும்புவரென எதிர்பார்க்கப் படுகிறது. (ந- 4)

# துருக்கியில் நேற்று நிலநடுக்கம்

## 35 பேர் பலி; 150பேர் காயம்

### கட்டிடங்கள் இடிந்து நாசம்

(ஸ்தான்புல்)

துருக்கியின் மேற்கு மாகாணமான அற்லஸ் மாகாணத்தில் நேற்று இடம்பெற்ற 'நிலநடுக்கத்தினால் 35பேர் பலியாகி உள்ளனர். 150பேருக்கு மேல் காயமடைந்துள்ளனர் கட்டிட இடிபாடுகளுக்குள் பலர் அகப்பட்டிருக்கலாம் என்றும் அஞ்சப்படுகின்றது.

துருக்கி நேரப்படி நேற்றுக் காலை 9மணிக்கு இடம்பெற்ற இந் நிலநடுக்கத்தினால் அற்லஸ் மாகாணத்தின் பாரிய கட்டிடங்கள் இடிந்து தரைமட்டமாக சரிந்துள்ளது. மின்சாரக்கம்பங்கள், தொலைத்தொடர்புக்கம்பங்கள் எல்லாம் தரையோடு சாய்ந்துள்ளன.

வீடுகளில் இருந்த மக்கள் தூக்கி வீசப்பட்டனர். இதன்போது இடிபாடுகளுக்குள் பெருமளவானோர் அகப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகின்றது.

உயிரிழந்தவர்களின் பெரும்பாலானோர் கட்டிட இடிபாடுகளுக்குள் அகப்பட்டும் மின்சாரம் தாக்கியுமே உயிரிழந்ததாக ஸ்தான்புல் செய்திகள் தெரிவிக்கின்றன.

நிலநடுக்கம் தாக்கிய பிரதேசங்களில் கட்டிடங்கள் விழுந்து சோபை இழந்து சுடுகாடாக மாறியுள்ளதாகவும் கட்டிட இடிபாடுகளுக்குள் அகப்பட்டிருப்போர் குறித்து உடனடியாக தகவல் தெரிவிக்க முடியாதிருப்பதாகவும், மீட்புப்பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும் அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

6 றிச்சர் அளவு பதிவாகியுள்ள இந் நிலநடுக்கம் தொடர்ந்தும் அப்பிரதேசத்தில் சற்றுக் குறைந்த அளவில் அதிர்வுகள் இருப்பதாகவும், உயிரிழந்தோரின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் அஞ்சப்படுகின்றது.

இதேவேளை நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தை துருக்கிப் பிரதமர் சுற்றிப்பார்த்து வருவதாகவும், சேத மதிப்பீடுகள் இடம்பெற்று வருவதாகவும், செய்தி ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

கடந்த 1998ம் ஆண்டு துருக்கியில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 18ஆயிரம்பேர் பலியானமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)



துருக்கியின் மேற்கு மாகாணமான அற்லஸ் மாகாணத்தில் நேற்று இடம் பெற்ற நில நடுக்கத்தினால் சிதையுண்டு போயிருக்கும் கட்டிடத்தையே படத்தில் காண்கிறீர்கள்.

(படம்:றொய்ட்டர்)

## கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி!

(புதுடில்லி)

இந்திய இங்கிலாந்து அணிகளுக்கிடையே நேற்றிரவு நடைபெற்று முடிந்த சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டியில் இங்கிலாந்து அணி ஐந்து ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

மும்பாயில் இரு அணிகளுக்குமிடையே ஆரம்பமான ஆறாவதும், இறுதியுமான இப் போட்டித் தொடரில் முதலில் துடுப்பெடுத் தாடிய இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 225 ஓட்டங்களை பெற்றது. அணியின் தொடக்க ஆட்டக்காரர் மார்கஸ் ரஸ் கோபி 95 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட அதேவேளை அவருடன் இணைந்து ஆடிய இங்கிலாந்து அணித்தலைவர் நாசிர்குஷைன் 41 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்திய அணியின் அபாரப்பந்து வீச்சாளர்களான ஹர்ஜன்சிங் 5 விக்கட்டுக்களையும் அணித்தலைவர் சௌரவ்கங்கலி 2 விக்கட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 50 ஓவர்களில் அனைத்து விக்கெற்றுக்களையும் இழந்து 250 ஓட்டங்களை பெற்று 5 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவிக் கொண்டது.

அணியின் நட்சத்திர ஆட்டக்காரர் சச்சின் டென்டுல்கர் 12 ஓட்டங்களையும் வீரேந்திரசேவி 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

இதேவேளை நேற்றிரவு நடைபெற்று முடிந்த ஆறு போட்டி தொடரிலும் இரு அணிகளும் 3:3 என்ற புள்ளிகளைப் பெற்று சமநிலையில் உள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## கப்பம் வாங்கும் குற்றச்சாட்டை மறுத்து விடுதலைப் புலிகள் அறிக்கை

(கொழும்பு)

சட்டவிரோதமாக கிழக்கு மாகாணத்தில் வசூலிக்கப்படும் கப்பங்களுக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென தமிழீழ விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அறிக்கை ஒன்றை விடுதலைப் புலிகள் நேற்று வெளியிட்டுள்ளனர்.

அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

கிழக்கு மாகாணத்தில் சில தினங்களாக பொதுமக்கள், வர்த்தகர்களிடம் கப்பம் வாங்கும் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளது. இதனைக் கண்டித்து கடந்த வெள்ளிக்கிழமை மூதூரில் ஹர்த்தாலும் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கப்பம் வாங்கும் நடவடிக்கைகளை தமிழீழ விடுதலைப் புலிகளே மேற்கொள்கின்றனரென குற்றச்சாட்டுக்களும் குறிப்பாக தென் பகுதியில் உள்ள அரசியல் கட்சிகளும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இக் கப்பம் வாங்கும் நடவடிக்கைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் எந்தவித தொடர்பு மில்லை. அத்துடன் இந் நடவடிக்கையை வன்மையாக கண்டிக்கின்றோம்.

சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் இத்தருணத்தில் விடுதலைப் புலிகளின் பெயருக்கு களங்கம் ஏற்படும் விதத்தில் சில விஷமிகளால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையே இதுவாகும்.

புதிய அரசாங்கம் பதவி ஏற்றதன் பின்னர் எமது தேசியத் தலைவர் பிரபாகரன் ஒரு தலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளார். அதனை அரசாங்கமும் ஏற்றுள்ளது. இச் சூழ்நிலையைப் பயன்படுத்தி பணம் பறித்தல், வீடுகளில் கொள்ளையிடுதல், நகைகள் அபகரித்தல் முஸ்லிம்களின் கடைகளில் பொருட்களை வாங்கி விட்டு புலிகளின் பெயரைக் கூறி பணம் செலுத்தாமல் செல்லுதல், புலிகளின் இலச்சினை பொறிக்கப்பட்ட கடிதத்தை காட்டிக் கப்பம் வாங்குதல் போன்ற சம்பவங்கள் குறித்து தற்போது எமது கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

கப்பம் வாங்கும் அனுமதியை நாம் எவருக்கும் வழங்கவில்லை என்பதை திட்டவட்டமாக கூறிக் கொள்ள விரும்புகின்றோம்.

எனவே மக்கள் அனைவரும் இத்தகைய கொள்ளைக் கும்பல்களிடம் எச்சரிக்கையாக இருக்கும்படியும், இவ்வாறான சம்பவங்கள் இனிமேலும் நடைபெற்றால் அது குறித்து எமது கவனத்திற்கு கொண்டுவருமாறும் கேட்டுக்கொள்கின்றோமென அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-4)

### கணக்கு வாக்குவாக்கெடுப்பு நாளை பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)

கொழும்பு அடுத்தமாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத்திட்டத்திற்கு முன்பதாக நாளை செவ்வாய்க் கிழமை கணக்குவாக்கு வாக்கெடுப்பு விபரங்களை அரசாங்கம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க உள்ளது இந்த கணக்கு வாக்கு வாக்கெடுப்பை நிதியமைச்சர் கே.என்.சொக்ஸி பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பார்

### இத்தாலிக்கு...

கட்டி இழுத்துக் கரைக்குக் கொண்டு வந்துள்ளனர். இப்படகில் இருந்து அரிசி, சீனி, பருப்பு ஆகிய பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் மாலுமி எனத் தொழில் குறிக்கப்பட்டுள்ள 84 அடையாள அட்டைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்த அடையாள அட்டைகள் யாவும் போலிகளானவை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (வ-8)

### சமாதான...

ஐ.தே. கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மயோன் முஸ்தபாவும் கலந்து கொண்டார்.

மட்டக்களப்பு வந்தாறுமூலை, சின்னஊறணிச் சந்தி, ஆகிய பகுதிகளிலிருந்து ஆரம்பமான பேரணிகள் மட்டக்களப்பு காந்தி சதுக்கத்தில் இணைந்து கொண்டன.

இதேவேளை வாழைச்சேனை இந்துக் கல்லூரில் இருந்து புறப்பட்ட பேரணி வாழைச்சேனைப் பிரதேச செயலகம் வரை சென்றது.

அம்பாறையில் பெரிய நீலாவணையில் இருந்து புறப்பட்ட பேரணிகள் காரைதீவு வரை சென்றன.

சுமார் 10 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் இப்பேரணிகளில் கலந்து கொண்டதாகவும் மிகவும் எழுச்சியுடன் பேரணிகள் இடம்பெற்றதாகவும் மட்டுநகர் தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ)

### நிரந்தர...

பிடிக்கப்படுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நீண்ட கால யுத்த நிறுத்தம் கடைப்பிடிக்கப்படுவதற்கு விடுதலைப்புலிகள் தரப்பில் ஏற்கனவே பச்சைக் கொடி காட்டியுள்ளமை தெரிந்ததே (க)

### தனிமையில்..

பாட்டை அடுத்து நேற்றுப் பிற்பகல் 5 மணிக்கு ஸ்தலத்திற்கு விரைந்த பருத்தித்துறைப் பொலிஸார் இரு பெண்களினதும் எரிந்த நிலையில் காணப்பட்ட உடல் எச்சங்களை மீட்டுள்ளனர். சடலங்கள் எரிந்து கிடக்கப்பட்ட அறைக்கு பின் விறகுகள் அடுக்கிக் கிடந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

**அடையாளம் காணப்பட்டனர்.**

எரிந்த நிலையில் மீட்கப்பட்ட சடலங்கள் பருத்தித்துறை மெதடிஸ் பெண்கள் உயர்நிலைப் பாடசாலையின் முன்னாள் ஆசிரியை செல்வி. நல்லதம்பி அழகம்மா (வயது 82), அவரது பெறாமகளான வேலாயுதபிள்ளை சாந்தினிதேவி (வயது 42) என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

நல்லதம்பி அழகம்மாவின் உடல் முற்றாக எரிந்த நிலையில் துடைப்பகுதி மட்டும் காணப்படுவதாகவும், வேலாயுதபிள்ளை சாந்தினிதேவியின் உடலில் தலைப் பகுதி மட்டும் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எரியுண்ட நிலையில் மீட்கப்பட்ட சடலங்களை பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி எஸ். கதிரவேற்பிள்ளை, பருத்தித்துறை நீதிபதி அன்னலிங்கம் பிறேம் சங்கர், ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

இரு சடலங்களும் தற்போது பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறைப் பகுதியை பெரும் பரபரப்பிற்கு உள்ளாக்கிய சம்பவம் தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸார் தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-4,5,23,42,104,245)




யாழ். பல்கலைக்கழக சமூகவியல் சமூக புத்தாண்டு சமூகப்பணி தொடக்க வைபவத்தில் முச்சக்கர வண்டி வழங்கும் செயற்றிட்டத்துக்கு தலைமை வகித்த சமூகவியல் சமூக-2001 தலைவர் ஆர்.பஞ்சாட்சர சர்மா துணைவேந்தரினால் கௌரவிக்கப்படுகின்றார். உடன் தற்போதைய தலைவி செல்வி காயத்திரி, கலைப்பீடாதிபதி பேராசிரியர் கோபாலகிருஸ்ணஐயர், சமூகவியல் சமூக பெருந்தகை கலாநிதி என்.சண்முகலிங்கன் பெரும் பொருளாளர் ஏ.ஈ.ரிச்சேட், பயனாளி திருமதி செல்லம்மா


**தேவை**

தொலைபேசி லைன்
(மோட்டறோலா)
உரிமை மாற்றம்
செய்ய விரும்புவோர்
தொடர்பு கொள்ளவும்.

G. அழகன்
புகையிரத நிலைய வீதி,
கோண்டாவில்.
T.P. 021-3524
(C/3437)



**அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்**

**தமிழ்க் கட்சிகளின் கூட்டமைப்பு**

**அவசர வேண்டுகோள்**

யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களில் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டியிட விரும்பும் வேட்பாளர்களும், தொகுதிக் கிளைகளின் தலைவர்களும், செயலாளர்களும் வேட்பாளர் பட்டியலைத் தயாரித்து நாளை 5ம் திகதி காலை 10.00 மணிக்கு முன் தலைமைச் செயலகத்தில் நேரில் ஒப்படைக்கவும்.

அ. இ. தமிழ்க காங்கிரஸ்

126, 3ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
[4442]


## மரண அறிவித்தல்

### விஷ்ணு அரியகுட்டி

யாழ் ஸ்ரான்லிக்கல்லூரி வீதியை நிரந்தர வசிப்பிடமாக கொண்டவரும், கலைமகள் வீதி அரியாலையை தற்போதைய வசிப்பிடமாக கொண்டவருமாகிய விஷ்னு அரியகுட்டி (04.02.2002) இன்று அதிகாலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஷ்னு தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற தெய்வானையின் அன்புக்கணவரும் இராசகிளி, நற்குணம்(தபாலதிபர் தெல்லிப்பழை), கனகலிங்கம்(ஓய்வுபெற்ற கடற்படை உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புத்தந்தையும்; சின்னராசா, சரஸ்வதி, ஞானேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் சரஸ்வதி ஆகியோரின் சகோதரரு மாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.02.2002) அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 3மணியளவில் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

66 கலைமகள் வீதி,
அரியாலை
யாழ்ப்பாணம்

தகவல்
அ. நற்குணம்
(மகன்)
C/3438

இப்பத்திரிகை வலம்புரி அன் கோ தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.02.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.